ஜூலை – செப்டம்பர் (2026)

கடந்து வந்த பாதை

WWW.JIHTN.ORG

மின்னிதழ்



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்

தமிழ்நாடு - புதுச்சேரி

திருப்பூரில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் சிறப்பு தர்பியா நிகழ்ச்சி

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – திருப்பூர் கிளை சார்பில், உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுக்கான ஒருங்கிணைந்த சிறப்பு தர்பியா நிகழ்ச்சி இன்று (05.07.2026) காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சி திருக்குர்ஆன் விரிவுரையுடன் தொடங்கியது. மகளிரணியின் நாஜிமா சகோதரி ஹம்சா பேகம் அவர்கள் திருக்குர்ஆன் விரிவுரையை வழங்கினார். தொடர்ந்து அமிரே மகாமி A. முஹம்மது காசிம் அவர்கள் தலைமை உரையாற்றினார். ஊழியர் மாமன் சாய்பு அவர்கள் சிற்றுரையாற்றினார். "ஒரு முஸ்லிமின் பொறுப்பு – தனிமனித மாற்றத்திலிருந்து சமூக மாற்றம் வரை" சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திருச்சி அஸ்ஸலாம் இஸ்லாமியக் கல்லூரியின் பேராசிரியர் மௌலவி நூஹ் மஹ்ழரி அவர்கள், "ஒரு முஸ்லிமின் பொறுப்பு – தனிமனித மாற்றத்திலிருந்து சமூக மாற்றம் வரை" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். தனிமனித மாற்றம் முதல் சமூக மாற்றம் வரையிலான ஒரு முஸ்லிமின் பொறுப்புகள் குறித்து ஆழமான கருத்துகளையும், சிந்தனையைத் தூண்டும் வழிகாட்டுதல்களையும் அவர் வழங்கினார். மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு G.I.O. மாணவிகளின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து, அனைத்து வட்டங்களின் செயல்பாட்டு அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. நிகழ்ச்சியின் நிறைவுரையையும் சிறப்பு விருந்தினர் மௌலவி நூஹ் மஹ்ழரி அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பெண்கள் உறுப்பினர்கள், ஊழியர்கள், நெருங்கிய ஆதரவாளர்கள், G.I.O. மற்றும் SIO மாணவ, மாணவிகள் உள்ளிட்ட 90-க்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர். இறுதியாக, இறைவனைப் புகழ்ந்து நன்றி தெரிவிக்கும் வகையில் நிகழ்ச்சி நிறைவுற்றது.



கத்தார் தூதரைச் சந்தித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தலைவர் இரங்கல்

புதுடெல்லி: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் அகில இந்தியத் தலைவர் சையத் சாதத்துல்லாஹ் ஹுசைனி அவர்கள், இந்தியாவிற்கான கத்தார் நாட்டுத் தூதர் முஹம்மது ஹசன் ஜாபிர் அல் ஜாஸிர் அவர்களை இன்று கத்தார் தூதரகத்தில் நேரில் சந்தித்தார். கத்தார் நாட்டின் முன்னாள் அமீர் ஷேக் ஹமத் பின் கலீஃபா அல் தானி அவர்களின் மறைவையொட்டி, கத்தார் அரசுக்கும் மக்களுக்கும் தனது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் சையத் சாதத்துல்லாஹ் ஹுசைனி தெரிவித்தார்.

ஷேக் ஹமத் பின் கலீஃபா அல் தானி அவர்கள் கத்தார் நாட்டின் வளர்ச்சிக்கும், உலக முஸ்லிம் சமூகத்தின் (உம்மத்தின்) நலன்களுக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தவர் என்றும், குறிப்பாக பாலஸ்தீன மக்களுக்கு அரசியல், மனிதாபிமான மற்றும் மறுசீரமைப்பு உதவிகளை வழங்குவதில் முக்கியப் பங்காற்றியவர் என்றும் அவர் குறிப்பிட்டார். மேலும், இந்தியா-கத்தார் இருதரப்பு உறவுகளைப் புதிய உயரத்திற்கு எடுத்துச் சென்ற தலைவராகவும் அவர் திகழ்ந்தார் என்றும், அவரது சிறப்பான சேவைகள் என்றும் நன்றியுடன் நினைவுகூரப்படும் என்றும் சையத் சாதத்துல்லாஹ் ஹுசைனி தெரிவித்தார். மறைந்த தலைவரின் குடும்பத்தினர், கத்தார் அமீர், கத்தார் அரசு மற்றும் அந்நாட்டு மக்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்த அவர், மறைந்தவருக்காக பிரார்த்தனையும் செய்தார்.



"அல்லாஹ் மறைந்தவரின் பாவங்களை மன்னித்து, அவரது நற்செயல்களை ஏற்றுக்கொண்டு, தனது விசாலமான அருளில் அவருக்கு உயர்ந்த இடத்தை வழங்குவானாக. அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் பொறுமையையும் ஆறுதலையும் அருள்வானாக."

இந்தியாவிற்கான கத்தார் நாட்டுத் தூதர் முஹம்மது ஹசன் ஜாபிர் அல் ஜாஸிர், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தலைவரின் நேரில் வருகைக்கும், இரங்கல் தெரிவித்ததற்கும், பிரார்த்தனைகளுக்கும் தனது

மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார். மேலும், இந்தியா மற்றும் கத்தார் மக்களுக்கிடையேயான நல்லுறவு, பரஸ்பர மரியாதை மற்றும் ஒத்துழைப்பு மேலும் வலுப்பெற வேண்டும் என்ற நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தினார். இந்தச் சந்திப்பின்போது ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் துணைப் பொதுச் செயலாளர் சையத் முஹியுத்தீன் ஷாகிர் மற்றும் உதவிச் செயலாளர் டாக்டர் ரிஸ்வான் ரஃபீகி ஆகியோரும் உடனிருந்தனர்.

நீலகிரி மாவட்ட அரசு காஜியுடன் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நிர்வாகிகள் சந்திப்பு

குன்னூர், 12.07.2026: நீலகிரி மாவட்ட அரசு காஜி மௌலானா முஃப்தி முஜீபுர் ரஹ்மான் காஸிமி அவர்களை, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவர் மௌலவி ஹனீஃபா மன்பயீ, மாநில அமைப்புச் செயலாளர் கே. ஜலாலுத்தீன், மண்டல அமைப்பாளர் எஸ்.ஏ.கே. ஜெய்லானி மற்றும் குன்னூர் கிளை நிர்வாகிகள் இன்று (12.07.2026, ஞாயிற்றுக்கிழமை) சந்தித்தனர். இச்சந்திப்பின்போது, சமுதாயத்தின் தற்போதைய நிலை, அதில் காணப்படும் சவால்கள் மற்றும் உலமா பெருமக்களின் பொறுப்புகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் நல்வழிகாட்டலுக்கும் உலமா பெருமக்கள் ஆற்ற வேண்டிய பங்கு குறித்தும், தற்போதைய சூழலில் சமுதாய நலனுக்காக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது. சந்திப்பு நல்லெண்ணம் மற்றும் பயனுள்ள கருத்துப் பரிமாற்றத்துடன் நிறைவடைந்தது.



சிறப்பாகத் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஹிதாயா அரபிக் கல்லூரி சார்பில் விருதுகள்

சென்னை, ஜூலை 11, 2026: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – சென்னை மெட்ரோவின் கீழ் இயங்கி வரும் ஹிதாயா அரபிக் கல்லூரி சார்பில், 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளைப் பாராட்டி விருது வழங்கும் விழா இன்று (11.07.2026, சனிக்கிழமை) சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சென்னை மாநகரத் தலைவர் ஜனாப் நசீர் அத்தாவுல்லா, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்தியச் செயலாளர் சகோதரி ராபியா பஸ்ரி மற்றும் சென்னை மெட்ரோ எஜுகேஷனல் டிரஸ்டின் அறங்காவலர்கள் கலந்து கொண்டு, மாணவ, மாணவிகளுக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர் நிகழ்ச்சியில் பங்கேற்ற கல்வியாளர்கள் மற்றும் சிந்தனையாளர்கள், மாணவ, மாணவிகளின் கல்வி முன்னேற்றம், ஆளுமை மேம்பாடு, உயர்கல்விக்கான இலக்குகள் மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவை குறித்து ஊக்கமூட்டும் சிறப்புரைகளை வழங்கினர். மேலும், ஹிதாயா அரபிக்





கல்லூரியின் இறுதியாண்டு மாணவிகள் பல்வேறு போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகளில் பங்கேற்று முதல் பரிசுகளை வென்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்ததற்காக, அவர்களுக்கும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்ச்சியில் மாணவ, மாணவிகளின் பெற்றோர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். 450-க்கும் மேற்பட்டோர் பங்கேற்று விழாவைச் சிறப்பித்தனர். கல்வியில் சிறந்து விளங்கும் மாணவ, மாணவிகளை ஊக்குவிப்பதுடன், அறிவு, ஆளுமை, ஒழுக்கம் மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றில் சிறந்து விளங்கும் எதிர்காலத் தலைமுறையை உருவாக்கும் நோக்கில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, பங்கேற்ற அனைவரின் பாராட்டையும் பெற்றது.

வாணியம்பாடியில் சகோதர சமூகத்தைச் சார்ந்த சகோதரிகளுக்கான சிறப்பு சந்திப்பு

வாணியம்பாடி: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) மகளிர் அணி, வாணியம்பாடி சார்பில், சகோதர சமூகத்தைச் சார்ந்த சகோதரிகளிடையே பரஸ்பரப் புரிதல், நட்பு மற்றும் அர்த்தமுள்ள கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் சிறப்பு சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் ஏழு சகோதரிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ரிஸ்வானா ஷகீல் சாஹிபா அவர்களின் குர்ஆன் விரிவுரையோடு தொடங்கியது. தொடர்ந்து, சமூக மற்றும் ஆன்மிக விழுமியங்கள் குறித்து கலந்துரையாடல் நடைபெற்றது. மேலும், முஹர்ரம் மாதத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்கமளிக்கப்பட்டதுடன், நீதி, தியாகம், பொறுமை மற்றும் அமைதி போன்ற இஸ்லாமிய விழுமியங்கள் எடுத்துரைக்கப்பட்டன. சமூகத் தொடர்புப் பணியின் ஒரு பகுதியாக, உதயதாரகை மாத இதழ் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் குறித்து விளக்கமளிக்கப்பட்டதுடன், பங்கேற்ற அனைத்து சகோதரிகளுக்கும் இதழின் பிரதிகள் இலவசமாக வழங்கப்பட்டன.



நிகழ்ச்சியில் சகோதரிகள் ஆர்வத்துடன் பங்கேற்று, பல்வேறு சிந்தனையூட்டும் கேள்விகளை எழுப்பினர். இஸ்லாத்தைப் பற்றி திறந்த மனதுடன் அறிந்துகொள்ளும் வகையில் அமைந்திருந்த அன்பான மற்றும் மரியாதைக்குரிய சூழலை அவர்கள் பாராட்டினர்.

அல்ஹம்துலில்லாஹ்! இச்சந்திப்பு சமூக நல்லுறவை வலுப்படுத்துவதற்கும், இஸ்லாமிய இலக்கியங்களை அறிமுகப்படுத்துவதற்கும், ஞானத்துடனும் அன்புடனும் இஸ்லாத்தின் செய்தியைப் பகிர்வதற்குமான ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் அணியின் அர்த்தமுள்ள முயற்சியாக அமைந்தது.

நாகூரில் TNRW சிறப்பு முகாம்...

நாகூர், ஜூலை 19, 2026: TNRW (தமிழ்நாடு மீட்புக் குழு) சார்பில் சிறப்பு முகாம், நாகூர் தெத்தியில் உள்ள சமரசம் நகர் பள்ளிவாசலில் 19.07.2026 அன்று நடைபெற்றது. நிகழ்ச்சியின் தொடக்கமாக, TNRW தன்னார்வலர் புதுக்கோட்டை அசார் அவர்கள் திருக்குர்ஆன் வசனங்களை ஓதி, அதன் தமிழாக்கத்தையும் வழங்கினார். தொடர்ந்து, முகாமில் கலந்து கொண்டவர்களை TNRW தமிழ்நாடு கேப்டன் அசார் வரவேற்றார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய தமிழ்நாடு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மக்கள் சேவைச் செயலாளர் முஹம்மது ஆரிப், முகாமின் நோக்கம் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாவட்ட அமைப்பாளர் நாகூர் ரியாஸ், "மக்கள் சேவையும் குர்ஆனும்" என்ற தலைப்பில் மக்கள் சேவை தொடர்பான திருக்குர்ஆன் வசனங்களை அழகிய முறையில் எடுத்துரைத்தார். அவரது உரை, TNRW-யின் 20-12 தர்பியாவின் நோக்கத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதாக அமைந்தது. தொடர்ந்து, நாகூர் சகோதரர் இப்ராஹிம் அவர்கள் "ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தும் நாகூரும்" என்ற தலைப்பிலான ஆவணப்படத்தின் மூலம், 2004ஆம் ஆண்டு சுனாமிக்குப் பின்னர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நாகூரில் மேற்கொண்ட மீட்பு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளைத் துல்லியமாக எடுத்துரைத்தார். இது TNRW தன்னார்வலர்களுக்கு ஒரு சிறந்த வரலாற்று நினைவூட்டலாக அமைந்தது.

இதனைத் தொடர்ந்து, சமரசம் நகர் தக்வா பள்ளிவாசலில் TNRW தன்னார்வலர்கள் தூய்மைப் பணியில் ஈடுபட்டனர். அவர்களின் ஒருங்கிணைந்த முயற்சியின் மூலம் சுமார் இரண்டு மணி நேரத்தில் பள்ளிவாசல் முழுமையாகத் தூய்மைப்படுத்தப்பட்டது உணவு இடைவேளைக்குப் பின்னர், நாகூர் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் ரியாஸ் அவர்கள், ஆம்புலன்ஸின் பயன்பாடு மற்றும் அவசரச் சூழ்நிலைகளில் ஆம்புலன்ஸை எவ்வாறு கையாள்வது என்பது குறித்த நடைமுறைப் பயிற்சியை வழங்கினார். இதில் தன்னார்வலர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இறுதியாக, TNRW தன்னார்வலர்களுக்கு சமரசம் நகர் பகுதியைச் சுற்றிப் பார்வையிடும் வாய்ப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. குறிப்பாக, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் கட்டப்பட்டுள்ள 100 வீடுகளையும் அவர்கள் பார்வையிட்டனர். மக்கள் சேவை, ஆன்மிகப் பயிற்சி, பேரிடர் மீட்புப் பணிகள், அவசரகாலத் தயார்நிலை மற்றும் சமூக நலப்பணிகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்த வகையில் நடைபெற்ற இச்சிறப்பு முகாம், TNRW தன்னார்வலர்களுக்கு பயனுள்ள அனுபவமாக அமைந்தது.





ராமநாதபுரத்தில் ‘உதய தாரகை’ இதழ் அறிமுகப் பிரச்சாரம்

ராமநாதபுரம்: அல்ஹம்துலில்லாஹ்! தொடர்ந்து நடைபெற்று வரும் ‘உதய தாரகை’ இதழ் அறிமுகப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் அணி, ராமநாதபுரம் சார்பில் பல்வேறு கல்வி நிறுவனங்களுக்கு நேரில் சென்று இதழை அறிமுகப்படுத்தி, அதன் நோக்கம் மற்றும் தனித்துவமான அம்சங்கள் குறித்து விளக்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக, சதக் பள்ளியின் முதல்வர் திருமதி அர்ச்சனா, பிரின்ஸ் பள்ளியின் தலைமை ஆசிரியை மற்றும் கிரசன்ட் பள்ளி, கொழும்பு ஆலிம் பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்களின் ஆசிரியர்களை மகளிர் அணி நிர்வாகிகள் சந்தித்தனர்.

அப்போது ‘உதய தாரகை’ இதழின் பிரதிகள் வழங்கப் பட்டதுடன், வாசகர்களுக்கு பயனுள்ள, அர்த்தமுள்ள மற்றும் நற்பண்புகளை வளர்க்கும் உள்ளடக்கங்களை வழங்குவதே இதழின் நோக்கம் என்பது குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும், இதழின் தனித்துவமான அம்சங்கள் குறித்தும் விளக்க மளிக்கப்பட்டது.

கல்வியாளர்கள் இம்முயற்சியை அன்புடன் வரவேற்று, ‘உதய தாரகை’ இதழ் அறிமுகப் பிரச்சாரத்தைப் பாராட்டியதுடன், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் அணி மேற்கொண்டு வரும் இம்முயற்சிகளுக்கு தங்களது ஆதரவையும் தெரிவித்தனர்.



மதுரையில் ‘செயல் துடிப்புமிக்க ஊழியர் – செயல் துடிப்புமிக்க ஜமாஅத்’ நிகழ்ச்சி

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், மதுரை கிளை சார்பில் “செயல் துடிப்புமிக்க ஊழியர் – செயல் துடிப்புமிக்க ஜமாஅத்” என்ற கருப்பொருளில் சிறப்பு நிகழ்ச்சி, 25.07.2026, சனிக்கிழமை காலை 10.30 மணி முதல் ஜீவாநகர் இஸ்லாமிக் சென்டரில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரை கிளை அமீர் ஜனாப் மருத்துவர் ஆவல் பீர் மகாமி அவர்கள் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியின் தொடக்கமாக, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரை கிளை உறுப்பினர் சகோதரர் முனவர் சுல்தான் அவர்கள் திருக்குர்ஆன் விரிவுரையை வழங்கினார். அதனைத் தொடர்ந்து, தலைமை உரையாற்றிய மருத்துவர் ஆவல் பீர் மகாமி அவர்கள், “இறைத் தொடர்பை வலுப்படுத்துதல் மற்றும் அதிகரித்தல்” என்ற தலைப்பில் உரையாற்றினார். இறைவனுடனான தொடர்பை வலுப்படுத்துவதன் அவசியம் மற்றும் அதற்கான வழிமுறைகள் குறித்து அவர் விளக்கினார்.

தொடர்ந்து, பாலக்காடு விரிவாக்கக் குழுப்



பொறுப்பாளர் ஜனாப் ஏ.பி. அப்துல் நாசர் அவர்கள் சிறப்புரையாற்றினார். அவர், “ஜமாஅத்தின் தனித்தன்மையும் முன்னேற்றமும்” மற்றும் “மக்களின் கருத்தை இஸ்லாத்திற்கு சாதகமாக மாற்றுதல்” ஆகிய தலைப்புகளில் விரிவாக உரையாற்றினார்.



அவர் ஆற்றிய உரை, நிகழ்ச்சியில் பங்கேற்ற ஊழியர்கள் மற்றும் அபிமானிகள் மத்தியில் எழுச்சியையும் புதிய உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.இந்நிகழ்ச்சியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரை கிளை நிர்வாகிகள், உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் அபிமானிகள் என 18 ஆண்களும் 58 பெண்களும் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிகழ்ச்சியை சகோதரர் முனவர் சுல்தான் அவர்கள் சிறப்பாக ஒருங்கிணைத்து வழிநடத்தினார். நிறைவாக, சகோதரர் முஹம்மது ரஃபி அவர்கள் நன்றியுரையாற்றினார்.நிகழ்ச்சி சிறப்பாகவும் பயனுள்ள வகையிலும் நிறைவுற்றது.

கும்பகோணத்தில் ‘தனிமனித சீர்திருத்தத்திலிருந்து உம்மத்தின் எழுச்சியை நோக்கி’ தர்பியத் நிகழ்ச்சி

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், கும்பகோணம் கிளை சார்பில் “தனிமனித சீர்திருத்தத்திலிருந்து உம்மத்தின் எழுச்சியை நோக்கி...” என்ற கருப்பொருளில் தர்பியத் நிகழ்ச்சி, 25.07.2026, சனிக்கிழமை காலை 10.30 மணி முதல் நைல் நகர் பள்ளிவாசலில் சிறப்பாக

நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் தலைமை தாங்கினார். தொடக்கமாக, நைல் நகர் பள்ளிவாசல் இமாம் மௌலவி அஹமது கபீர், B.A., அவர்கள் திருக்குர்ஆன் விரிவுரையை வழங்கினார்.



தொடர்ந்து, மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர் ஜனாப் T. அஜீஸ் லுத்துபுல்லாஹ் அவர்கள் "இயக்க முன்னோடிகளின் தியாகமும் அர்ப்பணிப்பும்" மற்றும் "தஜ்தீதே ஷஹாதத் – ஷஹாதத்தைப் புதுப்பித்தல்" ஆகிய தலைப்புகளில் சிறப்புரையாற்றினார். மாநிலச் செயலாளரும் மனிதவள மேம்பாட்டுத் துறை (HRD) பொறுப்பாளரும் திருச்சி அமீரே மக்காமீனுமான டாக்டர் ஹஜ் மொய்தீன் அவர்கள் "இயக்க ஊழியர்களாக உருவாவது எவ்வாறு?" மற்றும் "இயக்கமும் நாமும்" ஆகிய தலைப்புகளில் உரையாற்றினார். அவரது உரை பங்கேற்பாளர்களிடையே புதிய சிந்தனையையும் செயலூக்கத்தையும் ஏற்படுத்தியது.



மாநில ஊடகத்துறைச் செயலாளரும் திருப்பூர் அமீரே மக்காமீனுமான S. சாகுல் ஹமீது அவர்கள் "இயக்க ஊழியரில் Gen Z தலைமுறையும் ஊடகமும்" என்ற தலைப்பில் உரையாற்றினார். இன்றைய தலைமுறையினரிடம் இஸ்லாமிய விழுமியங்களை ஊடகங்களின் வாயிலாகக் கொண்டு சேர்க்க வேண்டியதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

தஜ்தீதே ஷஹாதத் – ஷஹாதத்தைப் புதுப்பித்தல் மதிய உணவு இடைவேளைக்கு முன்பாக, "தஜ்தீதே ஷஹாதத் – ஷஹாதத்தைப் புதுப்பித்தல்" நிகழ்வின் ஒரு பகுதியாக, மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர் ஜனாப் T. அஜீஸ் லுத்துபுல்லாஹ் அவர்கள், புதிதாக இயக்க உறுப்பினர்களாக இணைந்த சகோதரர் ஹாஜா மாலிக் மற்றும் சகோதரர் முகமது ரியாஸ் ஆகியோருக்கு ஷஹாதத்தைப் புதுப்பித்து வைத்தார்.

மேலும், அல்லாஹ்வின் மார்க்கத்தில் உறுதியுடனும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் செயல்படுமாறு அவர்களுக்கு அறிவுரை வழங்கினார். இந்த நிகழ்வு பங்கேற்ற அனைவரிடமும் எழுச்சியையும் ஆன்மிக உற்சாகத்தையும் ஏற்படுத்தியது. பிற்பகல் அமர்வு பிற்பகல் அமர்வில் நடைபெற்ற சிறு தலைப்புகள் குறித்த கலந்துரையாடலில் ஜனாப் முகமது யூனுஸ், சகோதரி ரஹ்மத்து நிஷா, சகோதரி ரோஜா கனி, சகோதரி ஹசீனா யூசுப் மற்றும் ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் ஆகியோர் தங்களது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

காலை அமர்வை ஜனாப் ஹாஜா மாலிக் அவர்கள் தொகுத்து வழங்கினார். பிற்பகல் அமர்வை சகோதரி ரஹ்மத்து நிஷா அவர்கள் சிறப்பாக வழிநடத்தினார்.

இந்நிகழ்ச்சியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான சகோதர, சகோதரிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிகழ்ச்சியின் நிறைவில், தர்பியத் நிகழ்ச்சியில் பகிரப்பட்ட சிந்தனைகள் மற்றும் வழிகாட்டுதல்களை தனிமனித வாழ்க்கை, குடும்பம், சமூகப் பணிகள் மற்றும் இயக்கப் பணிகளில் நடைமுறைப்படுத்த அனைவரும் உறுதியேற்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

மதுரை மாவட்ட ஆட்சியரை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நிர்வாகிகள் சந்திப்பு

மதுரை, 28.07.2026: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், மதுரை கிளை சார்பாக, புதிதாகப் பொறுப்பேற்றுள்ள மதுரை மாவட்ட ஆட்சியர் திரு. நிதிஷ் கிருஷ்ணா, இ.ஆ.ப., அவர்களை மரியாதை நிமித்தமாக 28.07.2026 அன்று சந்தித்தனர். இச்சந்திப்பின்போது, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், மதுரை கிளையின் பொறுப்புத் தலைவர் ஜனாப் ஆவல் பீர் அவர்கள் மாவட்ட ஆட்சியருக்கு பூங்கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.



மேலும், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் பிரிவு PRO சகோதரி ஆரிஃபா ராணி அவர்கள், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் வெளியீடுகளான 'சாதி ஒழிய, சமத்துவம் மலர' புத்தகம், 'சமரசம்' இதழ் மற்றும் மகளிரால் வெளியிடப்படும் 'உதய தாரகை' இதழ் ஆகியவற்றை மாவட்ட ஆட்சியருக்கு வழங்கி, அவற்றின் நோக்கம் மற்றும் உள்ளடக்கங்கள் குறித்து அறிமுகப்படுத்தினார்.

மதுரை முனிச்சாலை வட்டத்தில் அதிகாலை நேர அமர்வு

மதுரை, 02.08.2026: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், மதுரை முனிச்சாலை வட்டம் சார்பில், ஊழியர்களின் ஆளுமைத் திறனை மேம்படுத்தும் நோக்கில் "அதிகாலை நேர அமர்வு" 02.08.2026 அன்று ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு காலை 6.30 மணிக்கு நடைபெற்றது. அமர்வில், கஅப் இப்னு மாலிக் (ரலி) அவர்களின் சிறந்த ஆளுமைப் பண்புகள் மற்றும் ஒரு சிறிய அலட்சியத்தின் காரணமாக அவர் எதிர்கொண்ட பெரும் சோதனை குறித்து எடுத்துரைக்கப்பட்டது. இதுதொடர்பாக திருக்குர்ஆனின் அத்தியாயம் அத்-தவ்பா 9:118 வசனத்தின் கருத்தும் விளக்கப்பட்டது. மேலும், இறைவன் அவர்களை மன்னித்து அருளிய நிகழ்விலிருந்து பெற வேண்டிய படிப்பினைகள் எடுத்துக்கூறப்பட்டன.

தொடர்ந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கற்றுத்தந்த பின்வரும் பிரார்த்தனை ஓதப்பட்டது:



"அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல் ஹம்மி வல் ஹஸனி, வல் அஜ்ஸி வல் கஸலி, வல் புஹ்லி வல் ஜுப்னி, வ தலஅத்-தைனி, வ கலபதிர் ரிஜால்." பொருள்: "இறைவா! கவலை மற்றும் துக்கம், இயலாமை மற்றும் சோம்பல், கஞ்சத்தனம் மற்றும் கோழைத்தனம், கடன் தொல்லை மற்றும் மனிதர்களின் அடக்குமுறை ஆகியவற்றிலிருந்து உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்." நிகழ்ச்சியில் ஜனாப் பஷீர் அஹமது சாஹிப் அவர்கள் சிறப்புரையாற்றினார். அவரது உரை, பங்கேற்ற ஊழியர்களுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிக்கும் வகையில் அமைந்தது.

இவ்வாறு ஆன்மிக சிந்தனை, சுயபரிசோதனை மற்றும் ஆளுமை மேம்பாட்டை ஒருங்கிணைத்த இவ்வதிகாலை நேர அமர்வு, ஊழியர்களிடையே நல்ல எழுச்சியையும் செயலூக்கத்தையும் ஏற்படுத்தியது.

திருப்பூரில் 'செயல் துடிப்புமிக்க ஊழியர் – செயல் துடிப்புமிக்க ஜமாஅத்' மகளிர் சிறப்பு நிகழ்ச்சி

திருப்பூர், 29.07.2026: தேசம் தழுவிய பரப்புரையை முன்னிட்டு, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், திருப்பூர் கிளை மகளிர் அணி சார்பில், மகளிருக்கான சிறப்பு நிகழ்ச்சி 29.07.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திருப்பூர் மகளிர் அணியின் நாஜிமா சகோதரி R. ஹம்சா பேகம் அவர்கள் தலைமை தாங்கினார். அவர் "அடிப்படை கட்டாயப் பணிகள் மற்றும் கலிமாவின் விளக்கம்" என்ற தலைப்பில் வழிகாட்டும் உரையாற்றினார். இதில், ஜமாஅத்தின் அடிப்படைப் பொறுப்புகள் மற்றும் இஸ்லாமிய அழைப்புப் பணியின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

தொடர்ந்து, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினர் சகோதரி ஜபீன் பானு அவர்கள் "செயல் துடிப்புமிக்க ஊழியர் – செயல் துடிப்புமிக்க ஜமாஅத்" என்ற



தலைப்பில் சிறப்புரையாற்றினார். இயக்கப் பணிகளில் ஊழியர்களின் அர்ப்பணிப்பு, பொறுப்புணர்வு, ஒற்றுமை மற்றும் செயல்திறன் ஆகியவை வலிமையான ஜமாஅத்தை உருவாக்குவதற்கான அடித்தளமாக அமைகின்றன என்பதை அவர் வலியுறுத்தினார்.இதனைத் தொடர்ந்து, புதிதாக ஊழியர்களாக இணைந்தவர்களும் ஆதரவாளர்களும் தங்களது கருத்துகள், அனுபவங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளைப் பகிர்ந்து கொண்டனர். இந்தக் கலந்துரையாடல் பங்கேற்ற அனைவருக்கும் ஊக்கமளிக்கும் வகையில் அமைந்தது.

இந்நிகழ்ச்சியில் மொத்தம் 40 சகோதரிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை ஊழியர் சகோதரி ஆயிஷா அவர்கள் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார். மகளிரின் இயக்கப் பங்களிப்பை வலுப்படுத்துவதோடு, அர்ப்பணிப்பு மற்றும் செயல்திறன் மிக்க ஊழியர்களை உருவாக்கும் நோக்கில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி சிறப்பாக நிறைவுற்றது.

திருச்சியில் GIO சார்பில் 'பெண்மையைப் போற்றுவோம்' மாபெரும் இஸ்லாமிய கண்காட்சி.

திருச்சி, 02.08.2026: இஸ்லாமிய மாணவியர் அமைப்பு (GIO) – திருச்சி கிளை சார்பாக, Embracing Femininity தேசிய அளவிலான பரப்புரையை முன்னிட்டு, "பெண்மையைப் போற்றுவோம்" என்ற மையக்கருத்தில் மாபெரும் இஸ்லாமிய கண்காட்சி 02.08.2026, ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை சிறப்பாக நடைபெற்றது. இக்கண்காட்சியை வழக்கறிஞர் முஸ்பீரா அவர்கள் திறந்து வைத்து தொடங்கி

வைத்தார். கண்காட்சியில் 10 தலைப்புகளின் கீழ் 50 காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. இன்றைய சமூகப் பிரச்சினைகள், பெண்களுக்கு எதிராக நடைபெறும் பல்வேறு பிரச்சினைகள், மனநலம் மற்றும் மனஅழுத்தம், இஸ்லாம் கூறும் பெண்ணியம், இஸ்லாம் போற்றும் முன்மாதிரிப் பெண்கள், "ஹிஜாப் – தடையல்ல", இன்றைய காலகட்டத்தில் பெண்கள்



மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள், பெண்களின் உரிமைகள், பெண்களைப் பாதுகாப்பதில் சட்டத்தின் பங்கு மற்றும் "Know GIO" உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் காட்சி அரங்குகள் இடம்பெற்றிருந்தன. மேலும், பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் பல்வேறு விளையாட்டு (Games) அரங்குகளும், பெண் தொழில்முனைவோரின் தயாரிப்புகளை அறிமுகப்படுத்தி விற்பனை செய்யும் Women Entrepreneurs அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன. இவை பார்வையாளர்களிடையே பெரும்



வரவேற்பைப் பெற்றன. இந்நிகழ்வில் 750-க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொண்டு, பல்வேறு காட்சி அரங்குகளைப் பார்வையிட்டு பயனடைந்தனர்.

அறிவு, விழிப்புணர்வு, இஸ்லாமியப் பார்வையில் பெண்மையின் மகத்துவம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு ஆகியவற்றை எடுத்துரைக்கும் வகையில் நடைபெற்ற இம்மாபெரும் கண்காட்சி, பார்வையாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்களின் பாராட்டைப் பெற்று சிறப்பாக நிறைவடைந்தது.



பள்ளியில் மது, போதைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சி.

திருப்பூர், ஆக. 7: தமிழக அரசின் "போதை இல்லா தமிழ்நாடு" விழிப்புணர்வு இயக்கத்தின் ஒரு பகுதியாக, திருப்பூரில் உள்ள அரசு பள்ளியில் போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

பள்ளி மேலாண்மைக் குழு (SMC) சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், SMC உறுப்பினரும், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஹவுசிங் யூனிட் கிளை பொறுப்பாளருமான சகோதரி ஷகிலா பானு அவர்கள், "போதை இல்லா தமிழ்நாட்டை உருவாக்குவோம்" என்ற தலைப்பில் மாணவ, மாணவிகளிடம் விழிப்புணர்வு உரையாற்றினார்.

தனது உரையில், போதைப்பொருட்களால் தனிநபர், குடும்பம் மற்றும் சமூகத்திற்கு ஏற்படும் பல்வேறு பாதிப்புகளை மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் அவர் விளக்கினார். மேலும், தங்களை மட்டுமின்றி தங்களது நண்பர்களையும் போதைப்பொருள் பழக்கத்திலிருந்து பாதுகாக்க வேண்டிய பொறுப்பையும் வலியுறுத்தினார்.
நிகழ்ச்சியின் நிறைவில், பள்ளித் தலைமை ஆசிரியர் சகோதரி ஷகிலா பானுவின் விழிப்புணர்வு உரையைப் பாராட்டினார். மாணவ, மாணவிகள் தாங்கள் கேட்டறிந்த கருத்துகளை தங்களது



வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதோடு, தங்களது நண்பர்களிடையேயும் போதைப்பொருள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவோம் என உறுதியளித்தனர்.

தொடர்ந்து, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து பள்ளி வளாகத்தைச் சுற்றி விழிப்புணர்வுப் பேரணி நடத்தினர். அப்போது, "போதை இல்லா தமிழ்நாட்டை உருவாக்குவோம்!" என்ற முழக்கங்களை எழுப்பி, போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இந்நிகழ்வில் சகோதரி ஜெரினா மற்றும் சகோதரி ஷகிலா பானு ஆகியோர் கலந்துகொண்டனர்.

மது, போதையில்லா தமிழ்நாடு மக்கள் விழிப்புணர்வு பரப்புரை மற்றும் லோகோ வெளியீட்டு விழா

மதுரை, ஆக. 12: தமிழகத்தில் மதுபோதை மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு எதிராக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், "போதை இல்லா தமிழ்நாடு" மக்கள் விழிப்புணர்வு பரப்புரை மற்றும் லோகோ வெளியீட்டு விழா மதுரை இஸ்லாமிக் சென்டரில் நடைபெற்றது.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) மதுரை கிளை சார்பில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு, மதுரை JIH பொறுப்புத் தலைவர் ஜனாப் ஆவல் பீர் தலைமை வகித்தார்.



இந்நிகழ்வில், "மதுபோதை இல்லா தமிழ்நாடு" பரப்புரையின் ஒருங்கிணைப்பாளர் ஜனாப் முஹம்மது ரியாஸ் அவர்கள் லோகோவை வெளியிட்டு, பரப்புரையின் அவசியம் மற்றும் அதன் முக்கிய நோக்கங்கள் குறித்து உரையாற்றினார்.

அவர் தனது உரையில், மது மற்றும் போதைப் பொருட்களின் பயன்பாடு தனிநபர்களின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வை பாதிப்பதுடன், குடும்பங்களில் சீர்குலைவையும் பல்வேறு சமூகப் பிரச்சினைகளையும் உருவாக்குகிறது என்று குறிப்பிட்டார். எனவே, போதைப்பொருள் பயன்பாட்டின் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், போதை இல்லாத சமூகத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளில் அனைவரையும் இணைப்பதும் அவசியம் என வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, "மதுபோதை இல்லா தமிழ்நாடு" மக்கள் விழிப்புணர்வு பரப்புரை மதுரையில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் JIH மதுரை கிளையின் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவு பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் என 50-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

வாணியம்பாடியில் நடைபெற்ற ராபிதத்துல் உலமா மாநில மாநாடு

வாணியம்பாடி | ஆக. 13, 2026: ரப்பானியீன்களாக இருங்கள்" என்ற மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, ராபிதத்துல் உலமா – தமிழ்நாடு சார்பில் மாநில அளவிலான உலமாக்கள் மாநாடு வாணியம்பாடியில் நடைபெற்றது. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட உலமாக்கள் இம்மாநாட்டில் பங்கேற்றனர். சமகாலச் சவால்கள் குறித்து ஆழமான கலந்துரையாடல் மாநாட்டின் பல்வேறு அமர்வுகளில், இன்றைய சமூகத்தின் முக்கியமான சவால்கள் குறித்து ஆழமான உரைகளும் கலந்துரையாடல்களும் நடைபெற்றன.



குறிப்பாக, இளைஞர்களிடையே அதிகரித்து வரும் சீரழிவுப் போக்குகள், போதைப்பொருள் மற்றும் மதுபானப் பழக்கத்தின் தீமைகள், குடும்பங்களில் உருவாகும் பிரச்சினைகள் மற்றும் குடும்பச் சீர்திருத்தம், சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்துதல், சமகால சிந்தனைச் சவால்களை அறிவுபூர்வமாக எதிர்கொள்ளுதல், சகோதர சமுதாயத்தினரிடம் இஸ்லாத்தின் செய்தியை அழகிய முறையில் எடுத்துச் செல்லுதல், உலமாக்களின் சமூகப் பொறுப்பு மற்றும் ஆக்கப்பூர்வமான தலைமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டன. 20 உலமாக்களுக்கு சிறப்பு அங்கீகாரம் மார்க்கப் பணி, சமூக சேவை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பான பங்களிப்புகளை வழங்கி வரும் 20 உலமாக்களுக்கு மாநாட்டில் சிறப்பு அங்கீகார விருதுகள் வழங்கப்பட்டன.

மேலும், இளம் தலைமுறையினரிடையே சிந்தனைத் திறனையும் எழுத்தாற்றலையும் வளர்க்கும் நோக்கில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற 10 பேருக்கு பரிசுகளும் பாராட்டுகளும் வழங்கப்பட்டன.

முக்கியத் தீர்மானங்கள் மாநாட்டின் முக்கிய அம்சமாக, தற்போதைய சமூக மற்றும் அரசியல் சூழலைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட பல்வேறு முக்கியத் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

உலமாக்களின் ரப்பானிய்யத் வளர்ச்சி, இளைஞர்களின் பாதுகாப்பு மற்றும் குணநலன் வளர்ப்பு, முஸ்லிம் குடும்பங்களின் சீர்திருத்தம், சமகால சிந்தனைச் சவால்களுக்கு அறிவுபூர்வமான பதிலளித்தல், சமூக நல்லிணக்கம், உலமாக்களின் ஒற்றுமை, தற்போதைய அரசியல் சூழலில் நீதி மற்றும் அரசியலமைப்புச் சட்ட விழுமியங்களைப் பாதுகாத்தல், சேவை மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவை தீர்மானங்களில் முக்கிய இடம் பெற்றன. ஒருங்கிணைந்து செயல்பட உறுதி "நன்மையிலும் இறையச்சத்திலும் ஒருவருக்கொருவர் உதவுங்கள்" என்ற திருக்குர்ஆனிய வழிகாட்டுதலின் அடிப்படையில், சமூகத்தின் தார்மீக, அறிவுசார் மற்றும் சமூக முன்னேற்றத்திற்காக ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான உறுதியை மாநாட்டில் பங்கேற்ற உலமாக்கள் வெளிப்படுத்தினர்.

மாநாட்டில் இடம்பெற்ற உரைகள் அனைத்தும் இன்றைய சமூகச் சூழலுடன் தொடர்புடைய பல்வேறு முக்கிய அம்சங்களை எடுத்துரைத்தன. உலமாக்கள் மார்க்க வழிகாட்டிகளாக மட்டுமின்றி, சமூகத்தின் அறிவு, ஒழுக்கம், நல்லிணக்கம் மற்றும் ஆக்கப்பூர்வமான மாற்றத்திற்குத் தலைமைத்துவம் வழங்க வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு உண்டு என்ற கருத்து மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

மதுரை சிட்டி நடுநிலைப் பள்ளியில் மது, போதையில்லா தமிழ்நாடு விழிப்புணர்வு நிகழ்ச்சி

மதுரை | ஆக. 15, 2026: மதுரை மஹபூப்பாளையம் பெண்கள் வட்டம் சார்பாக, மதுரை சிட்டி நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற 80-வது சுதந்திர தின நிகழ்ச்சியில் மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில், சகோதரி நூர் மஜியா அவர்கள் மது மற்றும் போதைப்பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்தும், அவற்றிலிருந்து மாணவர்களைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு உரையாற்றினார்.

தொடர்ந்து, மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழி CIO மாணவி தலைமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் 150-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.



கும்பகோணத்தில் மது, போதையில்லா தமிழ்நாடு விழிப்புணர்வு பிரச்சாரம்...

கும்பகோணம்: "போதையில்லா தமிழ்நாடு" பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, கும்பகோணத்தில் போதைப்பொருள் மற்றும் மதுவினால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில், சாலிடாரிட்டி அமைப்பின் செயற்குழு உறுப்பினர் மௌலவி பி. முஹம்மது நாசர் புஹாரி அவர்கள், போதைப்பொருள் மற்றும் மதுவினால் தனிநபர், குடும்பம் மற்றும் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு உரை மற்றும் சிற்றுரை நிகழ்த்தினார்.



இந்நிகழ்வில், குடந்தை இரத்ததான டிரஸ்ட்டைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். மேலும், 30-க்கும் மேற்பட்டோர் நிகழ்வில் பங்கேற்று, போதைப்பொருள் மற்றும் மதுவுக்கு எதிரான விழிப்புணர்வு கருத்துகளைப் பெற்றுப் பயனடைந்தனர். போதைப்பொருள் மற்றும் மதுவின் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, போதையில்லாத சமூகத்தை உருவாக்கும் நோக்கில் இதுபோன்ற பிரச்சாரப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.

கும்பகோணம் KISWA விடுதி மாணவர்களிடையே மது, போதையில்லா தமிழ்நாடு விழிப்புணர்வு நிகழ்ச்சி

கும்பகோணம்: "போதையில்லா தமிழ்நாடு" பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, கும்பகோணம் KISWA விடுதி மாணவர்களிடையே போதைப்பொருள் மற்றும் மதுவினால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், சாலிடாரிட்டி அமைப்பின் மாநிலச் செயலாளர் மௌலவி பி. முஹம்மது நாசர் புகாரி அவர்கள் சிறப்புரையாற்றினார். தனது உரையில், போதைப்பொருள் மற்றும் மதுப் பழக்கத்தினால்

தனிநபர் மற்றும் சமூகத்தில் ஏற்படும் பல்வேறு பாதிப்புகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும், போதைப்பழக்கத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதுடன், சமூகத்தில் போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.



இந்நிகழ்வில், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளைத் தலைவர் அப்துல் கலாம் ஆசாத், KISWA தலைவர் கமால் பாட்ஷா, "போதையில்லா தமிழ்நாடு" பிரச்சாரத்தின் கும்பகோணம் கன்வீனர் முஹம்மது ரியாஸ், டிரஸ்ட் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உட்பட 60-க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று பயனடைந்தனர். நிகழ்ச்சியின் நிறைவில், போதைப்பொருள் மற்றும் மதுவுக்கு எதிராக அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

சகோ. T.E. நாசருக்கு 'சிறந்த குடும்பவியல் ஆலோசகர்' விருது

திருச்சி: தமிழ்நாடு முழுவதிலும் குடும்பவியல் மற்றும் குடும்ப ஆலோசனைத் துறையில் சிறப்பாகப் பணியாற்றி வரும் குறிப்பிட்ட சிலர் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு 'சிறந்த குடும்பவியல் ஆலோசகர்' (Excellent Family Counsellor) விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டன.



திருச்சியில் உள்ள ஜமால் முஹம்மது கல்லூரியில், கடந்த ஆகஸ்ட் 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இவ்விருதுகள் வழங்கப்பட்டன.

FCMCI (Family Counselling & Marriage-related Initiative) சார்பில், Muslim Marriage Advisory Council (MMAC) உடன் இணைந்து நடைபெற்ற இந்நிகழ்வில், அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியத்தின் செயலாளர் மௌலானா முஜ்தபா, ஜமால் முஹம்மது கல்லூரி முதல்வர் உள்ளிட்ட தமிழகத்தின் முக்கியப் பிரமுகர்கள் முன்னிலையில், தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வக்ஃப் வாரிய அமைச்சர் ஜனாப். ஷாஜஹான் அவர்கள் விருதுகளை வழங்கினார். அந்த வகையில், குடும்பங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளைச் சுமூகமாகத் தீர்ப்பதிலும், குடும்ப உறவுகளைப் பாதுகாப்பதிலும், சமூகத்தில் நல்லிணக்கத்தை உருவாக்குவதிலும் ஆற்றிவரும் சிறப்பான பணியைப் பாராட்டி, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (ஜ.இ.ஹி.) மண்டல அமைப்பாளர் சகோ. T.E. நாசர் அவர்களுக்கு 'Excellent Family Counsellor Award' வழங்கப்பட்டது.

குடும்ப நலன், திருமண உறவுகள் மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகிய துறைகளில் அவர் ஆற்றிவரும் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டி இவ்விருது வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

உடுமலையில் சுதந்திர தின நிகழ்வில் மது, போதைக்கு எதிரான விழிப்புணர்வு பரப்புரை

உடுமலை | ஆக. 15, 2026: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) உடுமலை கிளை மகளிரணி சார்பாக, உடுமலை SSA நகராட்சி பள்ளியில் சுதந்திர தின விழா நடைபெற்றது. நிகழ்வில் பள்ளித் தலைமை ஆசிரியை ஜெயலட்சுமி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.



"போதையில்லா தமிழகத்தை உருவாக்குவோம்" ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உடுமலை கிளை மகளிரணி தலைவி A. மெஹராஜ் அவர்கள், "போதையில்லா தமிழகத்தை உருவாக்குங்கள்" என்ற தலைப்பில் மாணவர்களிடையே விழிப்புணர்வு உரையாற்றினார். தனது உரையில், போதைப்பொருள் பயன்பாடு மனிதனின் அறிவையும் சிந்தனைத் திறனையும் பாதிப்பதுடன், தனிநபரின் எதிர்காலத்தையும்

குடும்பம் மற்றும் சமூகத்தின் நலனையும் சீர்குலைக்கும் என்பதை எடுத்துரைத்தார். மேலும், மாணவர்கள் போதைப்பொருட்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதுடன், போதைப்பழக்கத்திற்கு அடிமையாக மாட்டோம் என்ற உறுதியை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். இதனைத் தொடர்ந்து, மாணவர்களுக்கு "போதைக்கு நான் அடிமையாக மாட்டேன்" என்ற உறுதிமொழி எடுத்துக்கொள்ளச் செய்யப்பட்டது.

சுதந்திர தின வாழ்த்தும் கவிதையும் ஊழியர் வட்டப் பொறுப்பாளர் ஆயிஷா அவர்கள் சுதந்திர தின வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், சுதந்திர தினத்தை முன்னிட்டு கவிதையும் வாசித்தார். தொடர்ந்து, ஜமாஅத்தின் ஊழியர்கள் மாணவர்களுக்கு சுதந்திர தின வாழ்த்துகளைத் தெரிவித்தனர். பள்ளித் தலைமை ஆசிரியை மற்றும் ஆசிரியைகள் இந்நிகழ்வை மகிழ்ச்சியுடன் வரவேற்றதுடன், விழிப்புணர்வு உரையைப் பாராட்டினர். மேலும், மாணவர்கள் இதுபோன்ற பயனுள்ள கருத்துகளைத் தொடர்ந்து கேட்டு, அவற்றை தங்களது வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இந்நிகழ்வில் 60-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர். நிகழ்வின் நிறைவில் மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

மதுரையில் போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பிரச்சார வாகனம் தொடக்கம்

மதுரை: "போதையில்லா தமிழ்நாடு" பரப்புரையை முன்னிட்டு, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – மதுரை மாவட்டத்தின் சார்பாக, போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சார வாகனம் ஏற்பாடு செய்யப்பட்டது.



இந்தப் பிரச்சார வாகனத்தை மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. க. கல்லணை அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்விற்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரை மாவட்ட பொறுப்புத் தலைவர் ஜனாப் ஆவல் பீர் அவர்கள் தலைமை தாங்கினார். மேலும், மதுரை மீடியா பொறுப்பாளர் சகோதரர் முஹம்மது ரஃபி, செயலாளர் சகோ. பசீர் அகமது, பெண்கள் அணி, SIO மற்றும் GIO நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, போதையில்லாத சமூகத்தை உருவாக்கும் நோக்கில், இந்தப் பிரச்சார வாகனம் மதுரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொள்ள உள்ளது.

போதைப்பொருள் ஒழிப்பில் பொதுமக்களின் பங்களிப்பையும் பொறுப்பையும் வலியுறுத்தும் வகையில் இப்பிரச்சாரம் முன்னெடுக்கப்படுகிறது.

மாநிலத் தலைவருடன் திருப்பூர் (மங்கலம்) அனைத்து இஸ்லாமிய ஜமாஅத் கூட்டமைப்பு நிர்வாகிகள் சந்திப்பு

மங்கலம் | ஆக. 21, 2026: பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு மாநிலத் தலைவர் மவ்லவி ஹனீபா



மன்பஈ அவர்கள் மங்கலம் பகுதிக்கு வருகை தந்தார். இதையொட்டி, மங்கலம் அனைத்து இஸ்லாமிய ஜமாஅத் கூட்டமைப்பு (MAIJO) நிர்வாகிகள் மாநிலத் தலைவரைச் சந்தித்து கலந்துரையாடினர். ஒத்த கருத்துடைய விஷயங்களில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய அவசியம் சந்திப்பின்போது, ஒத்த கருத்துடைய விஷயங்களில் அனைத்து அமைப்புகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை மவ்லவி ஹனீபா மன்பஈ அவர்கள் எடுத்துரைத்தார். மேலும், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மேற்கொண்டு வரும் பல்வேறு பணிகள் குறித்து விளக்கமளித்ததுடன், அவற்றுக்கு அனைவரும் ஆதரவு வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து, சமூகப் பணிகளில் தெளிவான இலக்குகளை நிர்ணயித்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், குறிப்பாக கல்வி, மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் கவனம் செலுத்தி, அடுத்த தலைமுறையை இலக்காகக் கொண்டு செயல்பட வேண்டும் என்று எடுத்துரைத்தார். சந்திப்பில் கலந்துகொண்ட அனைத்து நிர்வாகிகளுக்கும் "போதையில்லா தமிழகம்" பரப்புரை தொடர்பான சமரசம் சிறப்பிதழ் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இச்சந்திப்பில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மேற்கு மண்டல அமைப்பாளர் ஜனாப் S.A.K. ஜெய்லானி, மங்கலம் கிளைத் தலைவர் ஜனாப் அப்துல் வதூத், கிளைச் செயலாளர் ஜனாப் அப்துல் ரஷீத், வெல்ஃபேர் கட்சியின் திருப்பூர் மாவட்டத் தலைவர் ஜனாப் முஹம்மது ரிஸ்வான் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மது, போதையில்லா தமிழ்நாடு பரப்புரை இயக்கம் – திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினருடன் சந்திப்பு

திருப்பூர் | ஆக. 22, 2026: "போதையில்லா தமிழ்நாடு" பரப்புரை இயக்கத்தின் ஒரு பகுதியாக, இன்று காலை திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு கே. சுப்பராயன் அவர்களைச் சந்தித்து, பரப்புரையின் நோக்கம், செயல்பாடுகள்



மற்றும் கோரிக்கைகள் குறித்து அறிமுகப்படுத்தி கலந்துரையாடல் நடைபெற்றது.சந்திப்பின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், "நானும் போதைப்பொருட்களை முழுமையாக எதிர்க்கக்கூடியவன் தான்.

அருமையான பணியை நீங்கள் முன்னெடுத்து வருகிறீர்கள். இது மனதை நெகிழச் செய்கிறது. சிறப்பாகச் செய்யுங்கள். வாழ்த்துக்கள்" என்று கூறி, பரப்புரைக்கு தனது ஆதரவைத் தெரிவித்தார்.

மேலும், தனது செல்போனை வழங்கி QR Code-ஐ ஸ்கேன் செய்ததன் மூலம், போதைப்பொருட்களுக்கு எதிரான தனது ஆதரவை மேலும் உறுதிப்படுத்தினார். சந்திப்பின்போது, "போதை அழிவின் பாதை" என்ற விழிப்புணர்வு புத்தகமும், "சமரசம்" இதழும் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாநிலச் செயலாளர் A. முகமது காசிம், மாநகரச் செயலாளர் முஜிபுர் ரஹ்மான், மகளிர் அணி பொறுப்பாளர்கள் நாஜிமா, அம்சா பேகம், துணைப் பொறுப்பாளர் தமீம் பானு மற்றும் ஊழியர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இச்சந்திப்பு பயனுள்ளதாகவும் நினைவுகூரத்தக்கதாகவும் அமைந்தது.

கும்பகோணத்தில் மது மற்றும் போதைக்கு எதிரான விழிப்புணர்வு கூட்டம்

கும்பகோணம் | ஆக. 18, 2026: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) – கும்பகோணம் சார்பில், மது மற்றும் போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு கூட்டம் சத்தியச்சோலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அய்யம்பேட்டை கிளைத் தலைவர் சகோ. முகமது நாசர் புஹாரி அவர்கள் கலந்துகொண்டார்.

மேலும், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளையின் பெண்கள் வட்டப் பொறுப்பாளர்கள் மற்றும் ஆண்கள் வட்டப் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர். கூட்டத்தில், மது மற்றும் போதைப்பொருட்களால் தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகத்திற்கு ஏற்படும் பல்வேறு தீமைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதிலும்,



பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் சமூகத்தின் ஒருங்கிணைந்த பங்களிப்பின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. மேலும், இந்த விழிப்புணர்வுச் செய்தியை அனைத்து பகுதிகளிலும், அனைத்து தரப்பு மக்களிடமும் விரைவாகக் கொண்டு செல்வதற்கான அவசியம் குறித்து கலந்துரையாடப்பட்டது. இதற்காக மேற்கொள்ள வேண்டிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால செயல்திட்டங்கள் குறித்தும் கருத்துகள் பரிமாறப்பட்டன. கூட்டத்தில் பங்கேற்ற பெண்கள் மற்றும் ஆண்கள் வட்டப் பொறுப்பாளர்கள் அனைவரும், போதையில்லாத சமூகத்தை உருவாக்கும் நோக்கில் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் என உறுதியளித்தனர்.

மேலக்காவரி பள்ளியில் மது, போதையில்லா தமிழ்நாடு விழிப்புணர்வு பிரச்சாரம்



கும்பகோணம் | ஆக. 20, 2026: "போதையில்லா தமிழகம்" பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, மேலக்காவரியில் உள்ள மைதீன் மெட்ரிகுலேஷன் பள்ளியில், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பெண்கள் வட்டத்தின் சார்பாக, மாணவர்கள் மத்தியில் மது மற்றும் போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாவட்டப் பொறுப்பாளர் முஹம்மது யூனுஸ் அவர்கள் கலந்துகொண்டு, போதைப்பொருட்கள் மற்றும் மதுவினால் தனிநபர், குடும்பம் மற்றும் சமூகத்தில் ஏற்படும் தீமைகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

மேலும், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளைத் தலைவர் ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் கலந்துகொண்டு, மாணவர்கள் நல்லொழுக்கத்துடன் வாழ்வதோடு, போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் தங்களது பங்களிப்பை வழங்க வேண்டும் என ஊக்கப்படுத்தினார். இந்நிகழ்வில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

மதுரையில் "மது, போதையில்லா தமிழ்நாடு" வட்டமேசை அமர்வு...

மதுரை | ஆக. 26, 2026: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரை சார்பாக, மாநில அளவில் முன்னெடுக்கப்படும் "போதை இல்லா தமிழ்நாடு" பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, கிருஷ்ண ஐயர் மஹாலில் வட்டமேசை அமர்வு நடைபெற்றது.

இவ்வமர்வில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஊழியர்கள், உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், உளவியல் நிபுணர்கள், பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஆளுமைகள், SIO மற்றும் GIO நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



போதைப்பொருள் பயன்பாட்டினால் தங்களது துறைகளில் ஏற்படும் தாக்கங்கள், அதனால் உருவாகும் தனிநபர் மற்றும் சமூகப் பிரச்சினைகள், அவற்றைத் தடுப்பதற்கான தீர்வுகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பங்கேற்பாளர்கள் கலந்துரையாடினர். மேலும், போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்காக குழுக்கள் அமைக்கப்பட்டன. போதைப்பொருளுக்கு எதிரான பணிகளைத் தொடர்ந்து ஒருங்கிணைந்து மேற்கொள்வதற்கான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கும்பகோணம் பள்ளிகளில் மது, போதைப் பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்...

கும்பகோணம்: மது மற்றும் போதைப்பொருட்களுக்கு எதிரான Anti-Drug Campaign-ன் ஒரு பகுதியாக, கும்பகோணத்தில் உள்ள செயின்ட் ஆன்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி மற்றும் காமராஜர் நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



இந்நிகழ்ச்சிகளில், மது மற்றும் போதைப்பொருட்களால் ஏற்படும் தீமைகள், அவற்றிலிருந்து மாணவர்கள் விலகி இருப்பதன் அவசியம், போதை இல்லாத ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதில் மாணவர்களின் பங்கு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விழிப்புணர்வு உரைகள் நிகழ்த்தப்பட்டன. சகோதரர் முஹம்மது யூனுஸ் மற்றும் சகோதரி

ரஹ்மத் நிஷா ஆகியோர் மாணவர்களிடையே சிறப்புரையாற்றினர். போதைப்பொருட்களின் தீமைகள் குறித்தும், அவற்றைத் தவிர்த்து ஆரோக்கியமான மற்றும் பொறுப்பான வாழ்க்கையை முன்னெடுப்பதன் அவசியம் குறித்தும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்ச்சிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு, போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு கருத்துகளை அறிந்து பயனடைந்தனர்.

கும்பகோணத்தில் மது, போதைக்கு எதிரான சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

ஐக்கிய ஜமாஅத் தலைவர்கள், பள்ளி நிர்வாகிகள் பங்கேற்பு கும்பகோணம்: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளையும், கும்பகோணம் வட்டார ஐக்கிய ஜமாஅத் அமைப்பும் இணைந்து முன்னெடுத்து வரும் மதுவும் போதைப்பொருட்களுக்கும் எதிரான பரப்புரையின் ஒரு பகுதியாக, ஐக்கிய ஜமாஅத் தலைவர்கள் மற்றும் பள்ளி நிர்வாகிகளுக்கான சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி 25.08.2026 அன்று கும்பகோணம் ஏ.பி. மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளைத் தலைவர் ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் வழிநடத்தினார். நிகழ்ச்சி, அகமத் கபீர் ஹஜ்ரத் அவர்களின் திருக்குர்ஆன் கிராஅத்துடன் தொடங்கியது.



கும்பகோணம் வட்டார ஐக்கிய ஜமாஅத் தலைவர் ஜனாப் M.Y. சம்சுதீன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்துவதில் ஐக்கிய ஜமாஅத் செயலாளர் ஜனாப் ஜே. ஜாகிர் ஹுசைன் அவர்கள் முக்கியப் பங்காற்றினார்.

மேலும், ஐக்கிய ஜமாஅத் பொறுப்பாளர்களான ஜனாப் அய்யூப் கான், எம்.எல்.ஏ. அப்துல் மாலிக், எம். முஹம்மது அபூபக்கர் மற்றும் ஜே. ஹாஜி முஹம்மது ஜெய்லானி ஆகியோர் நிகழ்ச்சிக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினர்.

போதையற்ற சமூகத்தை உருவாக்குவது நமது பொறுப்பு நிகழ்ச்சியின் சிறப்புரையை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மனிதவள மேம்பாட்டுத் துறை சார்ந்த எம். முஹம்மது இஸ்மாயில் இம்தாதி அவர்கள் வழங்கினார். தமது உரையில், மது மற்றும் போதைப்பொருட்கள் தனிமனித வாழ்க்கை, குடும்பம் மற்றும் சமூகத்தில் ஏற்படுத்தும் பாதிப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைத்த அவர், போதையற்ற சமூகத்தை உருவாக்குவதில் ஒவ்வொருவருக்கும் உள்ள பொறுப்பு குறித்தும் விளக்கினார்.

நிகழ்ச்சியின் தொடக்க உரையை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாவட்டப் பொறுப்பாளர் முஹம்மது யூனுஸ் அவர்கள் நிகழ்த்தினார். பல்வேறு தரப்பினர் பங்கேற்பு இந்நிகழ்வில் கும்பகோணம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பல்வேறு பள்ளிவாசல் நிர்வாகிகள், ஜமாஅத் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். குறிப்பாக, பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக நண்பர்களும்



பங்கேற்று, மதுவும் போதைப்பொருட்களும் இல்லாத நல்ல சமூகத்தை உருவாக்குவதற்கான இந்த விழிப்புணர்வு முயற்சிக்கு தங்களது ஆதரவைத் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஜமாஅத் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள், மதுவுக்கும் போதைப்பொருட்களுக்கும் எதிரான விழிப்புணர்வுப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற உறுதியை வெளிப்படுத்தினர்.

மதுவும் போதையும் இல்லாத ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சமூகத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

மதுரை நாடாளுமன்ற உறுப்பினரைச் சந்தித்து மது, போதையில்லா தமிழ்நாடு பிரச்சாரம் குறித்து எடுத்துரைப்பு

மதுரை: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – மதுரை கிளையின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் ‘போதையில்லா தமிழ்நாடு’ மாநிலப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, மதுரை மக்களவைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சு. வெங்கடேசன் அவர்களைச் சந்தித்து, பிரச்சாரத்தின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.



இச்சந்திப்பின்போது, போதைப்பொருட்கள் மற்றும் மதுப் பழக்கத்தால் தனிமனிதர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், போதை இல்லாத ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதற்கான விழிப்புணர்வுப் பணிகளின் அவசியம் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் வெளியிடப்படும் 'சமரசம்' இதழ் மற்றும் விழிப்புணர்வு புத்தகங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

போதையில்லாத தமிழ்நாட்டை உருவாக்குவதற்கான சமூக விழிப்புணர்வுப் பணிகளில் பல்வேறு தரப்பினரின் ஒத்துழைப்பை உருவாக்கும் நோக்கில் இச்சந்திப்பு நடைபெற்றது.

மது, போதையில்லா தமிழ்நாடு பரப்புரை: முன்னாள் அமைச்சர் வெள்ளகோவில் சாமிநாதன் அவர்களுடன் சந்திப்பு

திருப்பூர்: "போதை இல்லா தமிழ்நாடு" பரப்புரை இயக்கத்தின் ஒரு பகுதியாக, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – திருப்பூர் கிளை சார்பில், மாநிலச் செயலாளர் A. முகமது காசிம் மற்றும் மாநகரத் தலைவி அம்சா பேகம் ஆகியோர் தலைமையில் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் அடங்கிய குழுவினர், முன்னாள் அமைச்சர் திரு. வெள்ளகோவில் சாமிநாதன் அவர்களைச் சந்தித்தனர்.



இச்சந்திப்பின்போது, "போதை இல்லா தமிழ்நாடு" பரப்புரை இயக்கத்தின் நோக்கம், இதுவரை மேற்கொள்ளப்பட்டு வரும் விழிப்புணர்வுப் பணிகள் மற்றும் எதிர்கால செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டு, கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது.

சந்திப்பின் நிறைவாக, போதைப்பொருட்களின் தீமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் "போதை அழிவின் பாதை" புத்தகமும் "சமரசம்" இதழும் முன்னாள் அமைச்சர் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

மேலும், போதை ஒழிப்பு விழிப்புணர்வை வலியுறுத்தும் கையெழுத்து இயக்கத்திலும், ஆன்லைன் வழியாகவும் திரு. வெள்ளகோவில் சாமிநாதன் அவர்கள் பங்கேற்று தனது ஆதரவைப் பதிவு செய்தார்.

இச்சந்திப்பு, போதைப்பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும், போதை இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவதற்கான சமூகப் பொறுப்புணர்வை வலுப்படுத்துவதற்குமான முயற்சிகளில் ஒரு பகுதியாக அமைந்தது.

சேலத்தில் 'உதய தாரகை' பிரச்சாரத்தின் கீழ் உடல்நலம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி...

சேலம்: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) முன்னெடுத்து வரும் 'உதய தாரகை' பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, சேலம் ஜங்ஷன் மகளிர் வட்டத்தின் சார்பில் "உடல் ஓர் அமானத் – நமது ஆரோக்கியத்தைப் பேணுவோம்" என்ற தலைப்பில் சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி 29.07.2026 அன்று சேலம் ஜாகீர் அம்மாப்பாளையத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சி, சகோதரி பாத்திமா அவர்களின் திருக்குர்ஆன் கிராஅத்துடன் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து, சகோதரி தாஜ் நிஷா அவர்கள் அதன் தமிழ் விளக்கத்தை வழங்கினார். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – ஜங்ஷன் மகளிர் வட்ட ஒருங்கிணைப்பாளர் சகோதரி A. மும்தாஸ் அஸீம் அவர்கள் தொடக்க உரையாற்றினார். "உடல் ஓர் அமானத் – ஆரோக்கியத்தைப் பேணுவோம்" நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, சேலத்தைச் சேர்ந்த டாக்டர் சுல்தானா தில்ராஸ், MBBS, MS, MCh (Paediatric Surgery) அவர்கள் சிறப்புரையாற்றினார்.

தமது உரையில், நல்ல ஆரோக்கியத்தைப் பேணுவதன் அவசியம் குறித்தும், அல்லாஹ்வினால் நமக்கு வழங்கப்பட்ட உடல் ஒரு அமானத் (நம்பிக்கைப் பொறுப்பு) என்பதால் அதனை உரிய முறையில் பராமரிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் பயனுள்ள தகவல்களைப் பகிர்ந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் சுமார் 50 பெண்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, உடல்நலம் மற்றும் ஆரோக்கியப் பராமரிப்பு தொடர்பான பல்வேறு விழிப்புணர்வுத் தகவல்களைப் பெற்றனர்.

'மது, போதையில்லா தமிழ்நாடு' பரப்புரை: திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினருடன் சந்திப்பு

திருப்பூர்: "போதை இல்லா தமிழ்நாடு" பரப்புரை இயக்கத்தின் ஒரு பகுதியாக, திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலமுருகன் அவர்களை, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – திருப்பூர் கிளைத் தலைவர் A. முகமது காசிம் தலைமையிலான குழுவினர் சந்தித்தனர். இச்சந்திப்பில் மகளிரணி பொறுப்பாளர் அம்சா பேகம் உள்ளிட்ட ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

சந்திப்பின்போது, "போதை இல்லா தமிழ்நாடு" பரப்புரை இயக்கத்தின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் குறித்து சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், இதன் வாயிலாக மேற்கொள்ளப்படவுள்ள மக்கள் விழிப்புணர்வுப் பணிகள், பல்வேறு சமூக நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால முன்னெடுப்புகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. போதைப்பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் தேவையான ஒத்துழைப்பை வழங்குவது தொடர்பாகவும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.



இம்முயற்சியை வரவேற்ற சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலமுருகன் அவர்கள், தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகத் தெரிவித்தார். மேலும், படிப்படியாக போதை இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளைத் தாமும் அரசும் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

போதை இல்லாத சமூகத்தை உருவாக்குவதற்கான விழிப்புணர்வுப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதாக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – திருப்பூர் கிளை தெரிவித்துள்ளது.

அறந்தாங்கியில் 400 பள்ளி மாணவர்களுக்கு போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

அறந்தாங்கி: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அறந்தாங்கி வட்டம் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் "போதை இல்லா தமிழ்நாடு" பரப்புரையின் ஒரு பகுதியாக, Laurel Matriculation Higher Secondary School பள்ளியில் மாணவர்களுக்கான போதை ஒழிப்பு மற்றும் போதைப்பழக்கத்தின் தீமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – அறந்தாங்கி வட்டப் பொறுப்பாளர் சகோதரி நூருல் ஜெசிமா அவர்கள் மாணவர்களிடையே விழிப்புணர்வு உரையாற்றினார். தமது உரையில், மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கக்கூடிய போதைப்பழக்கத்தின் ஆபத்துகள், நண்பர்களின் தவறான அழுத்தங்களில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வது, நல்ல பழக்கங்களை வளர்த்துக் கொள்வது மற்றும் பொறுப்பான வாழ்க்கைத் தேர்வுகளை மேற்கொள்வது உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை எளிமையாகவும் பயனுள்ளதாகவும் எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் 400 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். பள்ளி நிர்வாகம் பாராட்டு நிகழ்ச்சி நிறைவடைந்த பின்னர், மாணவர்கள் நீண்ட நேரம் ஆர்வத்துடனும் கவனத்துடனும் விழிப்புணர்வு உரையைக் கேட்டதை ஆசிரியர்கள் பாராட்டினர். மேலும், உரை பயனுள்ளதாகவும் மாணவர்களுக்கு அவசியமானதாகவும் அமைந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வு மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளதைப் பாராட்டிய பள்ளித் தாளாளர், பள்ளியின் ஆண்டு அறிக்கையிலும் இந்நிகழ்வை சிறப்பாகப் பதிவு செய்ய வேண்டும் என்று தெரிவித்தார். மேலும், விழிப்புணர்வு உரையின் சிறப்பைப் பாராட்டும் விதமாக பள்ளி நிர்வாகத்தினர், சகோதரி நூருல் ஜெசிமா



அவர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவித்தனர். பள்ளி நிர்வாகம் மற்றும் ஆசிரியர்களின் அன்பான வரவேற்பு, பாராட்டு மற்றும் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இந்நிகழ்வு, மாணவர்களிடையே போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வை



ஏற்படுத்துவதிலும், போதையற்ற தலைமுறையை உருவாக்குவதற்கான சமூகப் பொறுப்புணர்வை வலுப்படுத்துவதிலும் பயனுள்ளதாக அமைந்தது.

புதுச்சேரியில் 'மது, போதையில்லா தமிழ்நாடு' கையெழுத்து இயக்கம்

புதுச்சேரி: "போதை இல்லா தமிழ்நாடு & புதுச்சேரி" பரப்புரையின் ஒரு பகுதியாக, புதுச்சேரி வில்லியனூர் பெரம்பையில் அமைந்துள்ள ராக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 31.08.2026 அன்று





போதைப்பொருட்களுக்கு எதிரான கையெழுத்து இயக்கம் (Signature Campaign) நடைபெற்றது. இந்நிகழ்வில், கல்லூரியைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்று கையெழுத்திட்டு, போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு முயற்சிக்கு தங்களது ஆதரவைப் பதிவு செய்தனர். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஆர்வமிக்க பங்கேற்புடன் நடைபெற்ற இக்கையெழுத்து இயக்கம் சிறப்பாக நிறைவடைந்தது.

நாச்சியார்கோவிலில் மது மற்றும் போதைக்கு எதிரான மக்கள் விழிப்புணர்வு பேரணி மற்றும் தெருமுனைக் கூட்டம்

நாச்சியார்கோவில் | 26.08.2026: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) – நாச்சியார்கோவில் கிளையின் சார்பில், மது மற்றும் போதைப்பொருட்களுக்கு எதிரான மக்கள் விழிப்புணர்வு பேரணி மற்றும் தெருமுனைக் கூட்டம் 26.08.2026 அன்று திருநறையூர் – நாச்சியார்கோவில் பகுதிகளில் சிறப்பாக நடைபெற்றது. திருநறையூர் பேருந்து நிறுத்தத்திலிருந்து விழிப்புணர்வு பேரணி தொடங்கியது. இதில் 100-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, மது மற்றும் போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு வாசகங்கள் மற்றும் முழக்கங்களை எழுப்பியவாறு பேரணியாகச் சென்றனர்.



பேரணிக்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நாச்சியார்கோவில் கிளைத் தலைவர் ஜனாப் A. ஷஃபீகுர் ரஹ்மான் அவர்கள் தலைமை தாங்கினார். பேரணியை நாச்சியார்கோவில் காவல் ஆய்வாளர் திரு. S. ராஜா அவர்கள் தொடங்கி வைத்தார். தெருமுனைக் கூட்டம் தொடர்ந்து, நாச்சியார்கோவில் கடைத்தெருவில் நடைபெற்ற தெருமுனைக் கூட்டத்தில் 200-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். ஆட்டோ ஓட்டுநர்கள், வியாபாரிகள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் ஆர்வத்துடன் பங்கேற்று, மது மற்றும் போதைப்பொருட்களுக்கு எதிரான தங்களது ஆதரவை வெளிப்படுத்தினர்.

நிகழ்வில் ஜாமிஆ மஸ்ஜித் இமாம் மௌலவி ஹாஃபிஸ் முஹம்மது சலீம் ரியாஜி, நாச்சியார்கோவில் அடைக்கலமாதா ஆலய



பங்குத்தந்தை அருட்தந்தை வின்சென்ட் சகாயராஜ், கும்பகோணம் ஜோதிமலை இறைப்பணி திருக்கூட்டம் நிறுவனார் தவத்திரு திருவடிக்குடில் சுவாமிகள் மற்றும் JIH மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜனாப் முஹம்மது யூனுஸ் ஆகியோர் விழிப்புணர்வு உரையாற்றினர்.

இந்நிகழ்வை சகோதரர் முகம்மது ஜியாவுதீன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.மாணவர்களின் விழிப்புணர்வு செயல்விளக்கம் நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, இந்திய மாணவர் இஸ்லாமிய அமைப்பு (SIO) சார்பில் மாணவர்கள், மது மற்றும் போதைப்பொருட்களால் ஏற்படும் பாதிப்புகளை பொதுமக்களுக்கு எளிதில் புரியும் வகையில் விழிப்புணர்வு செயல்விளக்கத்தை நடத்தினர்.

இரு மாணவர்கள் கல்வி கற்கும் இளைஞர்களைப் போன்று தோற்றமளித்து, பின்னர் மது மற்றும் போதைப்பொருட்களின் தீமைகளை பிரதிபலிக்கும் வகையில் முகமூடிகளை அணிந்து சிறிய நடிப்பின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இச்செயல்விளக்கம் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்ததுடன், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஆர்வத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. மேலும், நிகழ்ச்சியில் மது மற்றும் போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், இளைஞர்களைப் பாதுகாத்தல், குடும்பங்களின் எதிர்காலத்தைப்

பாதுகாத்தல் மற்றும் போதை இல்லாத சமூகத்தை உருவாக்குதல் உள்ளிட்ட கருத்துகள் வலியுறுத்தப்பட்டன. பொதுமக்களின் சிறப்பான பங்களிப்புடனும், பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களின் ஆதரவுடனும் நடைபெற்ற இந்நிகழ்வு, மது மற்றும் போதைப்பொருட்களுக்கு எதிரான சமூக விழிப்புணர்வை வலுப்படுத்தும் வகையில் சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் அமைந்தது.

கிருஷ்ணகிரியில் கல்லூரி மாணவர்களுக்கு மதுப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சி

கிருஷ்ணகிரி: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்கிருஷ்ணகிரி கிளையின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் 'போதையில்லா தமிழ்நாடு' பரப்புரையின் ஒரு பகுதியாக, மதுப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு விளக்கக் கூட்டம் 11.09.2026 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி முதல் மதியம் 12.15 மணி வரை அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் டாக்டர் S. தனபால், M.Sc., M.Phil., Ph.D. அவர்கள் தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்கினார். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் –



கிருஷ்ணகிரி நகரத் தலைவர் ஜனாப் சிபகத்துல்லாஹ் அவர்கள் முன்னிலை வகித்தார். போதைப்பொருள் குற்றங்கள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்ட மது விலக்கு அமல் பிரிவு காவல் ஆய்வாளர் திரு. N. ஜெகன்நாத் மற்றும் சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் திரு. N. கண்ணன் ஆகியோர், போதைப்பொருட்கள் தொடர்பான குற்றங்கள், அவற்றுக்கான சட்டரீதியான தண்டனைகள் மற்றும் பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டுதல்கள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தனர்.

மதுவால் ஏற்படும் உடல்நலப் பாதிப்புகள் டாக்டர் M. ஆபித், MBBS, DNB, DM (Neuro) அவர்கள், மதுப் பழக்கத்தால் ஏற்படக்கூடிய உடல்நலம் மற்றும் நரம்பியல் சார்ந்த பாதிப்புகள் குறித்து அறிவியல் அடிப்படையில் விரிவாக விளக்கினார். தனிமனிதர் முதல் தேசம் வரை சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பின் மாநிலத் தலைவர் M. முஹம்மத் ரியாஸ், MA, MBA அவர்கள், மதுப் பழக்கத்தால் தனிமனிதர், குடும்பம், சமூகம் மற்றும் தேசம் எதிர்கொள்ளும் பல்வேறு பாதிப்புகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும், இப்பாதிப்புகளில் இருந்து விடுபட்டு மீள்வதற்கான வழிமுறைகள் குறித்தும் பயனுள்ள கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார். நிகழ்வின் இறுதியில், பங்கேற்ற அனைவரும் போதைக்கு எதிரான உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்வில் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மாணவிகள் என சுமார் 150 பேர் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்கள், ஆசிரியர்கள் மற்றும் மருத்துவருக்கு நினைவுக் கேடயங்களும், போதைப்பொருட்களின் தீமைகள் குறித்த விழிப்புணர்வு நூலான 'போதை அழிவின் பாதை' புத்தகமும் வழங்கப்பட்டன.

சென்னையில் 'Drugs Awareness Marathon 2026' – JIH சென்னை மெட்ரோ பங்கேற்பு

சென்னை: போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், Kondattam Events சார்பில் நடத்தப்பட்ட "Drugs Awareness Marathon 2026 – 2.5 KMS Fun Run" நிகழ்வில், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – சென்னை மெட்ரோ Associate Partner ஆக இணைந்து பங்கேற்றது. மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்களிடையே போதைப்பொருள் பயன்பாட்டின்



தீமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – சென்னை மெட்ரோ சார்பில் கல்வி மற்றும் விழிப்புணர்வு சார்ந்த புத்தகங்கள் வழங்கப்பட்டு ஆதரவு அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் 'போதையில்லா தமிழ்நாடு' அமைப்பின் கன்வீனர் அஜ்மல் அவர்கள் கலந்து கொண்டு, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. M.L. விஜய்பிரபு அவர்களைச் சந்தித்து, போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் இளைஞர்களின் எதிர்காலம் தொடர்பான அம்சங்கள் குறித்து கலந்துரையாடினார்.

போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வுப் பணிகளுக்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – சென்னை மெட்ரோ வழங்கிய ஆதரவு மற்றும் பங்களிப்பைப் பாராட்டும் வகையில், Kondattam Events சார்பில் Certificate of Appreciation வழங்கப்பட்டது. இளைஞர்களை போதைப்பொருள் பழக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கும், ஆரோக்கியமான மற்றும் பொறுப்புணர்வு மிக்க எதிர்காலத்தை உருவாக்குவதற்குமான விழிப்புணர்வுப் பணிகளில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தொடர்ந்து பங்களிக்கும்.

மங்கலத்தில் 'மது போதை இல்லா தமிழ்நாடு' விழிப்புணர்வு தெருமுனைக் கூட்டம்

திருப்பூர் (மங்கலம்): ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மங்கலம் கிளையின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் 'மது போதை இல்லா தமிழ்நாடு' விழிப்புணர்வுப் பரப்புரையின் ஒரு பகுதியாக, 13.09.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் பல்லடம் சாலை, யூனியன் வங்கி முன்பு விழிப்புணர்வு தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது.



இக்கூட்டத்திற்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மங்கலம் கிளைத் தலைவர் ஜனாப் அப்துல் வதூத் அவர்கள் தலைமை தாங்கினார். மங்கலம் அனைத்து இஸ்லாமிய ஜமாஅத் கூட்டமைப்பின் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். வெல்ஃபேர் கட்சியின் திருப்பூர் மாவட்டத் தலைவர் M. முஹம்மது ரிஜ்வான் அவர்கள் தொடக்க உரையாற்றினார். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – மங்கலம் கிளைச் செயலாளர் ஜனாப் A. அப்துல் ரஷீத் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.



தொடர்ந்து, SDPI கட்சி மற்றும் காயிதே மில்லத் அறக்கட்டளை நிர்வாகிகள் விழிப்புணர்வு உரையாற்றினர். வெல்ஃபேர் கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் IM. சாதிக் அவர்கள் சிறப்புரையாற்றினார். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மேற்கு மண்டல அமைப்பாளர் ஜனாப் S.A.K. ஜெய்லானி அவர்கள் நிறைவுரையாற்றினார்.

இக்கூட்டத்தில் 50-க்கும் மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மதுவும் போதைப்பொருட்களும் ஏற்படுத்தும் பாதிப்புகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், போதை இல்லாத சமூகத்தை உருவாக்குவதற்கான சமூகப் பொறுப்புணர்வை வலியுறுத்தும் வகையில் இக்கூட்டம் நடைபெற்றது.

சேலத்தில் 'மது, போதையில்லா தமிழ்நாடு' விழிப்புணர்வு பரப்புரை நிகழ்ச்சி

சேலம், 26.09.2026: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) சேலம் மாநகரம் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் "போதை இல்லா தமிழ்நாடு" மாபெரும் விழிப்புணர்வு பரப்புரை நிகழ்ச்சி, சேலம் கோட்டை மைதானத்தில் 26.09.2026 அன்று மாலை எழுச்சியுடன் நடைபெற்றது.



இந்நிகழ்விற்கு JIH சேலம் வட்டப் பொறுப்பாளர் ஜனாப் F. அஸ்லம் அவர்கள் தலைமை தாங்கினார். JIH மண்டல அமைப்பாளர் ஜனாப் S.A.K. ஜெய்லானி அவர்கள் வரவேற்புரை மற்றும் தொடக்க உரையாற்றினார்.

பல்வேறு தரப்பினர் பங்கேற்பு நிகழ்வில் Dr. C. ஃபிராங்க்ளின் ஆசாத் காந்தி (காந்தியவாதி), ஜனாப் மு. அப்துல் ரஷீத் (தமஜக), ஜனாப் A. ஜாபர் சாதிக் (Solidarity) மற்றும் ஜனாப் S.N. சிக்கந்தர், மாநிலத் தலைவர் – வெல்ஃபேர் கட்சி ஆகியோர் சிறப்புரையாற்றினர். தங்களது உரைகளில், போதைப்பழக்கம் இளைஞர்களின் எதிர்காலத்தைப்

பாதிப்பதுடன், தனிமனிதர், குடும்பம் மற்றும் சமூகத்திலும் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்ட அவர்கள், போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வுப் பணிகளின் அவசியத்தை வலியுறுத்தினர். மேலும், GIO சகோதரி இ.



நஷிஹா அவர்கள் நிகழ்த்திய விழிப்புணர்வு உரை பங்கேற்றவர்களின் கவனத்தை ஈர்த்தது. போதை ஒழிப்பு உறுதிமொழி நிகழ்ச்சியின் நிறைவில், பங்கேற்ற அனைவரும் போதை ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் ஆண்கள் மற்றும் பெண்கள் என 100-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஆர்வத்துடன்



கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கு அனுமதி வழங்கிய காவல்துறையினருக்கும், ஒத்துழைப்பு வழங்கிய ஊடக நண்பர்களுக்கும், கலந்து கொண்ட பொதுமக்களுக்கும், JIH உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள், பெண்கள், Solidarity இளைஞர் அமைப்பு மற்றும் SIO நண்பர்கள் சார்பில் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

கரூரில் 500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற 'மது, போதையில்லா தமிழ்நாடு' கையெழுத்து இயக்கம்

கரூர்: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – கரூர் கிளையின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் "போதையில்லா தமிழ்நாடு" பரப்புரையின் ஒரு பகுதியாக, மது மற்றும் போதைப்பொருட்களுக்கு எதிரான கையெழுத்து இயக்கம் கரூர் ஈத்கா பள்ளிவாசல், கரூர் ஜாமிஆ பள்ளிவாசல் மற்றும் வெங்கமேடு SP காலனி பள்ளிவாசல் ஆகிய இடங்களில் ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு நடைபெற்றது. இக்கையெழுத்து இயக்கத்தில் 500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்று, மது மற்றும் போதைப்பொருட்களுக்கு எதிரான தங்களது ஆதரவை கையெழுத்து மூலம் பதிவு செய்தனர். இந்நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற பள்ளிவாசல் நிர்வாகத்தினர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினர். மேலும், பள்ளிவாசல்களின் இமாம்கள்



மற்றும் முத்தவல்லிகள் ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு "போதையில்லா தமிழ்நாடு" பரப்புரை குறித்த அறிவிப்பை வழங்கி, கையெழுத்து இயக்கத்தில் பங்கேற்குமாறு பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்தனர்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – கரூர் கிளையின் ஆண் உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்று, நிகழ்வுகளை ஒருங்கிணைத்து வழிநடத்தினர். மதுவுக்கும் போதைப்பொருட்களுக்கும் எதிரான சமூக விழிப்புணர்வை வலுப்படுத்தும் வகையில் நடைபெற்ற இக்கையெழுத்து இயக்கம் சிறப்பாக நடைபெற்றது.

கரூரில் பள்ளி மாணவர்களுக்கான போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

கரூர்: "போதையில்லா தமிழ்நாடு" பரப்புரையின் ஒரு பகுதியாக, கரூர் நகரில் அமைந்துள்ள கொங்கு பிரைமரி ஸ்கூல் மற்றும் தளவாபாளையம் நேஷனல் மாண்டிசோரி ஸ்கூல் ஆகிய இரு பள்ளிகளிலும் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சிகளில் மாணவர்கள் மத்தியில் போதைப்பொருட்களின் தீமைகள் மற்றும் அவற்றால்



ஏற்படும் தனிநபர், குடும்ப மற்றும் சமூக பாதிப்புகள் குறித்து உணர்வுபூர்வமாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், போதைப்பொருட்களிலிருந்து விலகி, போதை இல்லாத சமூகத்தை உருவாக்குவதில் மாணவர்களின் பங்கு குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.நிகழ்ச்சியின் நிறைவாக, பள்ளி மாணவர்கள் அனைவரும் போதைப்பொருட்களுக்கு எதிரான போதை எதிர்ப்பு வாக்குறுதியை ஏற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சிகளை ஜமாஅத்தே

இஸ்லாமி ஹிந்த் இயக்க உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் சிறப்பாக ஒருங்கிணைத்து நடத்தினர். குறிப்பாக, இரு பள்ளி நிர்வாகங்களும் நிகழ்ச்சிகளுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்கி, அவற்றைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

கரூரில் "முஸ்லிம் சமுதாயமும் தலைவர்களின் பொறுப்பும்" குறித்த கலந்துரையாடல்.

கரூர், 10.09.2026: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) கரூர் கிளை சார்பில், கரூர் கிளை ஜமாஅத் அலுவலகத்தில் 10.09.2026 அன்று மாலை, கரூர் ஐக்கிய ஜமாஅத் பிரமுகர்கள் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலச் செயலாளர் எஸ்.என். சிக்கந்தர் அவர்கள் கலந்து கொண்டார்.

"முஸ்லிம் சமுதாயமும் தலைவர்களின் பொறுப்பும்" என்ற கருப்பொருளில் நடைபெற்ற



இக்கலந்துரையாடலில், தமிழ்நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரும் "போதையில்லா தமிழ்நாடு" பரப்புரை குறித்தும், முஸ்லிம் சமூகத்தில் அதிகரித்து வரும் போதைப்பொருட்களின் பயன்பாடு குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

போதைப்பொருள் பயன்பாடு ஏற்படுத்தும் தனிநபர், குடும்ப மற்றும் சமூக பாதிப்புகள் குறித்து கருத்துகள் பரிமாறப்பட்டன. இந்த சமூகத் தீமையை எதிர்கொள்ள அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து, கூட்டாகவும் தொடர்ச்சியாகவும் செயல்பட வேண்டியதன் அவசியத்தைப் பங்கேற்றவர்கள் வலியுறுத்தினர்.

மேலும், சமூகத்தில் நிலவி வரும் இத்தகைய அவலநிலையை மாற்றுவதில் ஜமாஅத் தலைவர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் சமூகப் பிரமுகர்களுக்கு முக்கியப் பொறுப்பு இருப்பதாகவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அனைவரும் தங்களது கருத்துகளையும் ஆலோசனைகளையும் பகிர்ந்து கொண்டதால், இக்கலந்துரையாடல் ஆக்கப்பூர்வமானதாக அமைந்தது. நிகழ்ச்சியில் மாநிலச் செயலாளர் எஸ்.என். சிக்கந்தர் அவர்களுடன் JIH கரூர் கிளைத் தலைவர் ஹாருன் மற்றும் உறுப்பினர் ஜஃபருல்லாஹ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கரூரில் போதைக்கு எதிரான மக்கள் விழிப்புணர்வு பேரணி.

கரூர், 10.09.2026: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) கரூர் கிளை சார்பில், "போதையில்லா தமிழ்நாடு" பரப்புரையின் இறுதி நிகழ்வாக, போதைப்பொருள் மற்றும் மதுவுக்கு எதிரான மக்கள் விழிப்புணர்வு பேரணி 10.09.2026 அன்று காலை கரூர் நகரில் நடைபெற்றது.

கரூர் தலைமை தபால் நிலையம் அருகில் தொடங்கிய இப்பேரணி, ஜவஹர் பஜார் வழியாகச் சென்று



மனோகரா கார்னர் (பழைய பேருந்து நிலையம்) பகுதியில் நிறைவடைந்தது. நிகழ்ச்சியின் தொடக்கமாக சகோதரி தாரா அவர்கள் திருமறை வசனங்களை ஓதினார். தொடர்ந்து, JIH கரூர் கிளைத் தலைவர் ஹாருன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.



இதையடுத்து கரூர் ஐக்கிய ஜமாஅத் கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் நிஜாம் பாபு, தமுமுக நகரத் தலைவர் ஏ.ஆர். பத்ருதீன், எஸ்டிபிஐ நகரத் தலைவர் பாஷா மற்றும் வழக்கறிஞர் தமிழ் ராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பேரணிக்கு முன்னதாக நடைபெற்ற நிகழ்ச்சியில், மாறுவேடமணிந்த குழந்தைகள் கலந்து கொண்டு தங்களது பேச்சுத் திறனை வெளிப்படுத்தினர். மேலும், போதைப்பொருள் மற்றும் மதுவுக்கு எதிரான விழிப்புணர்வு கோஷங்கள் எழுப்பப்பட்டன.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலச் செயலாளர் எஸ்.என். சிக்கந்தர் அவர்கள் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு (PEW) ஆய்வாளர் திரு. ஹரிஹரன் அவர்கள் காலை 11.30

மணியளவில் பேரணியைத் தொடங்கி வைத்தார். பேரணியின் இறுதிவரை பங்கேற்பாளர்களுடன் நடந்து வந்து அவர் ஆதரவு தெரிவித்தார். பேரணி நிறைவடைந்ததைத் தொடர்ந்து, மாநிலச் செயலாளர் எஸ்.என். சிக்கந்தர் அவர்கள் ஆய்வாளர் ஹரிஹரன் அவர்களுக்கு புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கினார்.



இப்பேரணியில் கரூர் நகரைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு, போதைப்பொருள் மற்றும் மதுவுக்கு எதிரான விழிப்புணர்வு முயற்சிக்கு தங்களது ஆதரவை வெளிப்படுத்தினர். பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு குடிநீர் மற்றும் ஜூஸ் வழங்கப்பட்டது.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைமையகத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு.

சென்னை, 16.07.2026: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பாக மாநிலத் தலைமையகத்தில் இன்று (16.07.2026) காலை 11.30 மணி முதல் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு மாநிலத் தலைவர் மௌலவி ஏ. முஹம்மத் ஹனீபா மன்பயீ அவர்கள், தற்போதைய சமூக மற்றும் அரசியல் சூழல் தொடர்பாக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் நிலைப்பாடுகளை விளக்கி உரையாற்றினார். குறிப்பாக, நாளுக்கு நாள் அதிகரித்து வரும் ஊழல், மக்களாட்சியைச் சூழ்ந்துள்ள ஆபத்துகள், டாஸ்மாக் மதுபானக் கடைகளை மூடுதல் மற்றும் பி.சி.எம். (BCM) இடஒதுக்கீடு ஆகிய நான்கு முக்கியப் பிரச்சினைகள் குறித்து அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து, ஊடகவியலாளர்கள் பல்வேறு சமகாலப் பிரச்சினைகள் தொடர்பாக மாநிலத் தலைவரிடம் கேள்விகளை எழுப்பினர். தற்போதைய த.வெ.க. அரசின் செயல்பாடுகள் குறித்த கருத்து, தொடர்ந்து நடைபெற்று வரும் ஆணவக் கொலைகள், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள லயோலா மணி தொடர்பான நிலைப்பாடு, மதம் மாறிய இஸ்லாமியர்களுக்கான இடஒதுக்கீடு தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பு, கடந்த முறை முன்னெடுக்கப்பட்ட "அழகிய அண்டை வீட்டார்" பரப்புரையின் தாக்கம், திரைப்படங்களுக்கு தணிக்கைக் குழுவின் அனுமதி இருந்தபோதிலும் சில திரைப்படங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கான காரணம் உள்ளிட்ட பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டன. மேலும், ஜனநாயகத்தின் மாண்புகள் சரிந்து வருகின்றன என்பதற்கான உதாரணங்கள், பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு மதுவின் பங்களிப்பு மற்றும்



இஸ்லாத்தில் சாதி குறித்த நிலைப்பாடு உள்ளிட்ட கேள்விகளையும் ஊடகவியலாளர்கள் முன்வைத்தனர். ஊடகவியலாளர்கள் எழுப்பிய அனைத்து கேள்விகளுக்கும் மாநிலத் தலைவர் மௌலவி ஏ. முஹம்மத் ஹனீபா மன்பயீ அவர்கள் விரிவான விளக்கங்களுடன் பதிலளித்தார்.

இந்நிகழ்ச்சியை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநில ஊடகச் செயலாளர் எஸ். சாகுல் ஹமீது அவர்கள் தொகுத்து வழங்கினார். நிகழ்வில் மாநிலத் துணைத் தலைவர்கள் ஜனாப் Y. யூசுப் பாஷா, ஜனாப் I. ஜலாலுதீன் மற்றும் மாநிலச் செயலாளர் ஜனாப் T. அஜீஸ் லுத்புல்லாஹ் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், பல்வேறு ஊடக நிறுவனங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் செய்தியாளர்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சியின் நிறைவில், கலந்து கொண்ட அனைத்து ஊடகப் பிரதிநிதிகளுக்கும் பத்திரிகை அறிக்கை வழங்கப்பட்டது.

முகம்மத் அலி ஜவ்ஹர் பல்கலைக்கழக இடிப்பு நடவடிக்கைக்கு உடனடி தடை கோரி ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோரிக்கை

ராம்பூர், 22.07.2026: ராம்பூர் வளர்ச்சி அதிகார அமைப்பு (RDA) பிறப்பித்துள்ள இடிப்பு உத்தரவைத் தொடர்ந்து, ராம்பூரில் அமைந்துள்ள மௌலானா முகம்மத் அலி ஜவ்ஹர் பல்கலைக்கழகத்திற்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) அமைப்பின் தூதுக்குழு நேரில் சென்று பல்கலைக்கழக நிர்வாகம், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களைச் சந்தித்தது. அவர்களுக்கு JIH தனது ஆதரவையும் ஒற்றுமையையும் தெரிவித்தது. தொடர்ந்து, பல்கலைக்கழக நிர்வாகம், சமூகத் தலைவர்கள் மற்றும் ஆசம் கானின் குடும்பத்தினரையும்

தூதுக்குழுவினர் சந்தித்தனர். மேலும், உத்தரப் பிரதேச மாநில ஆளுநருக்கு முகவரியிடப்பட்ட கோரிக்கை மனுவை ராம்பூர் மாவட்ட ஆட்சியர் வாயிலாகச் சமர்ப்பித்தனர்.

ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்வி மற்றும் எதிர்காலத்தைப் பாதுகாக்கவும், பல்கலைக்கழக



வளாகத்தில் எந்தவித இடிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும் உத்தரப் பிரதேச அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் வலியுறுத்தியுள்ளது. பல்கலைக்கழகத்தின் 38 கட்டடங்களுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டுள்ள இடிப்பு உத்தரவை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், ஜூலை 30, 2026 என்ற காலக்கெடு நெருங்கி வரும் நிலையில், வளாகத்தில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு இடிப்பு நடவடிக்கையும் மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் என்றும் JIH சுட்டிக்காட்டியுள்ளது. மேலும், ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்வி உரிமையைப் பாதுகாக்கவும், இந்நிறுவனத்தின் அரசியலமைப்புச் சட்டப் பாதுகாப்பு தொடர்பான அம்சங்களைப் பேணவும் உத்தரப் பிரதேச ஆளுநர் உடனடியாகத் தலையிட வேண்டும் எனக் கோரி மாவட்ட ஆட்சியர் வாயிலாக மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இடிப்பு உத்தரவின் சட்டப்பூர்வத் தன்மை மற்றும் பல்கலைக்கழக நிர்வாகம் எழுப்பியுள்ள அதிகார வரம்பு தொடர்பான கேள்விகளுக்கு உரிய நீதித்துறை நடைமுறை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்றும், இந்த விவகாரத்தைத் தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் அதிகாரிகள் உடனடியாகக் கொண்டு செல்ல வேண்டும் என்றும் JIH வலியுறுத்தியுள்ளது. பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பின்தங்கிய மாணவர்கள் மற்றும் கட்டணச் சலுகை பெறும் மாணவர்கள் உட்பட சுமார் 3,000 மாணவர்களின் கல்வி மற்றும் எதிர்காலம் குறித்து தூதுக்குழுவினர் கவலை தெரிவித்தனர்.


பல்கலைக்கழகத்தின் மொத்தம் 40 கட்டடங்களில் 38 கட்டடங்களை இடிப்பது என்பது, பல்கலைக்கழகத்தின் செயல்பாட்டையே பெருமளவில் பாதிக்கும் என்றும், அரசியலமைப்புச் சட்டத்தின் 30-ஆவது பிரிவின் கீழ் சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் தொடர்பாகவும் முக்கியமான கேள்விகளை எழுப்புவதாகவும் தூதுக்குழுவினர் தெரிவித்தனர். சமூகத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இப்பல்கலைக்கழகம் கல்விச் சேவையை வழங்கி வருவதைச் சுட்டிக்காட்டிய தூதுக்குழுவினர், இடிப்பு நடவடிக்கை தொடருமானால் ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்வி வாய்ப்புகள் பாதிக்கப்படக்கூடும் எனக் கவலை தெரிவித்தனர். இது குறித்து தூதுக்குழுவினர் கூறுகையில், "நாங்கள் பல்கலைக்கழக நிர்வாகத்துடனும் மாணவர்களுடனும் உறுதியாக நிற்கிறோம். இது வெறுமனே கட்டடங்கள் தொடர்பான பிரச்சினை அல்ல; மாணவர்களின் கல்வி உரிமை மற்றும் அவர்களின் எதிர்காலம் தொடர்பான பிரச்சினையாகும். இடிப்பு நடவடிக்கைக்கு மாற்றாக, கட்டடங்களை முறைப்படுத்துதல் (Regularisation) தொடர்பான சாத்தியக்கூறுகளை அரசு ஆராய வேண்டும். நிர்வாக நடவடிக்கைகளால் எந்தவொரு மாணவரின் கல்வியும் பாதிக்கப்படக் கூடாது" என்று தெரிவித்தனர்.

இத்தூதுக்குழுவில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தேசியச் செயலாளர்கள் மௌலானா முகம்மத் ஷஃபி மதனி, முகம்மத் அஹமத், உதவிச் செயலாளர் இனாம் உர் ரஹ்மான், JIH மேற்கு உத்தரப் பிரதேச மாநிலத் தலைவர் மௌலானா ஜமீர் உல் ஹஸன் ஃபலாஹி, JIH ராம்பூர் தலைவர் மௌலானா அப்துஸ்ஸலாம் பஸ்தவி மற்றும் மூத்த பத்திரிகையாளர் சையத் கலீக் அஹ்மத் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

மாணவர் போராட்டத்திற்கு ஆதரவாகச் செயல்பட்ட சகோதரர் ஜுனைத்துக்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஆதரவு

புதுடெல்லி: மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக டெல்லி ஜந்தர் மந்தரில் தன்னலமற்ற முறையில் தன்னார்வத் தொண்டாற்றியதற்காக காவல்துறையினரால் அச்சுறுத்தலுக்கும் துன்புறுத்தலுக்கும் ஆளானதாகக் கூறப்படும் சகோதரர் ஜுனைத், இன்று ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்திய தலைமையகத்திற்கு வருகை தந்தார்.

அவரது வருகையின்போது, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் துணைத் தலைவர் மலிக் முஹ்தசிம்,



குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பான APCR (Association for Protection of Civil Rights) தேசியச் செயலாளர் நதீம் கான் மற்றும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் பிற பொறுப்பாளர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.



அப்போது, தாம் எதிர்கொண்டதாகக் கூறப்படும் துயரமான அனுபவங்களை சகோதரர் ஜுனைத் பகிர்ந்து கொண்டார். எந்தச் சட்டபூர்வமான காரணமும் இன்றி காவல்துறையினர் தம்மைக் கைது செய்து உத்தரகண்ட் மாநிலத்திற்கு அழைத்துச் சென்றதாகவும், மேலும் தேசிய புலனாய்வு முகமை (NIA) தொடர்பான வழக்கில் சிக்க வைக்கப்படும் எனத் தம்மை மிரட்டி அச்சுறுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.
சகோதரர் ஜுனைத்தின் துணிச்சல், தன்னலமற்ற சேவை மற்றும் மாணவர் இயக்கத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் துணைத் தலைவர் மலிக் முஹ்தசிம் அவர்கள் பாராட்டினார். மேலும், அவர் எதிர்கொண்டு வருவதாகக் கூறப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் துன்புறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அவருக்கு முழுமையான சட்டரீதியான மற்றும் தார்மீக ஆதரவை வழங்கும் என உறுதியளித்தார்.

இதற்கு முன்னதாக, குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பான APCR-இன் பிரதிநிதிகள் குழு, சகோதரர் ஜுனைத்தின் கிராமத்திற்குச் சென்று அங்குள்ள காவல் நிலையப் பொறுப்பாளர் (SHO) மற்றும் பிற அதிகாரிகளைச் சந்தித்தது. சகோதரர் ஜுனைத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படும் துன்புறுத்தல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் நிர்பந்த நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அந்தக் குழு வலியுறுத்தியது.

தேசப்பற்று ஒரு குறிப்பிட்ட பாடலைப் பாடுவதால் மட்டும் அளவிடப்பட முடியாது: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்

புதுடெல்லி, 06.08.2026: தேசப்பற்று என்பது ஒரு குறிப்பிட்ட பாடலைப் பாடுவதால் மட்டுமே அளவிடப்பட முடியாது என்றும், தேசிய கௌரவ அவமதிப்பு தடுப்பு (திருத்த) மசோதா, 2026-ஐ மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் வலியுறுத்தியுள்ளது. மேலும், கல்வித் துறையில் விரிவான சீர்திருத்தங்களை மேற்கொள்வதுடன், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பேரிடர் தடுப்பு, முன்எச்சரிக்கை மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அமைப்பு தெரிவித்துள்ளது.

புதுடெல்லியில் உள்ள ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் அகில இந்திய தலைமையகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், தேசிய கௌரவ அவமதிப்பு தடுப்பு (திருத்த) மசோதா, 2026, நாட்டின் கல்வி அமைப்பில் நிலவும் சவால்கள் மற்றும் பல்வேறு மாநிலங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புகள் குறித்து அமைப்பின் மூத்த நிர்வாகிகள் தங்களது கருத்துகளை வெளியிட்டனர்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் துணைத் தலைவர் மலிக் முஹ்தசிம் கான் அவர்கள் பேசுகையில், வந்தே மாதரம் பாடல் தொடர்பாக நிறைவேற்றப்பட்டுள்ள தேசிய கௌரவ அவமதிப்பு தடுப்பு (திருத்த) மசோதா, 2026 குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்தார். நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தையும் அதன் நிறுவனங்களையும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் எப்போதும் மதித்து வருவதாகக் குறிப்பிட்ட அவர், வந்தே மாதரம் பாடலின் சில சரணங்களில் தாய்நாடு



தெய்வமாக உருவகப்படுத்தப்படுவதும், சில தெய்வங்களுடன் இணைத்துக் குறிப்பிடப்படுவதும் இஸ்லாத்தின் ஓரிறைக் கொள்கையான தௌஹீதுடன் ஒத்துப்போவதில்லை என்றார். இது ஒரு புதிய கருத்தோ அல்லது குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தின் தனிப்பட்ட நிலைப்பாடோ அல்ல என்றும், இந்தியாவின் ஜனநாயக மற்றும் அரசியலமைப்புச் சூழலில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட கருத்தாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

மதச் சுதந்திரம் மற்றும் மனச்சாட்சியின் சுதந்திரத்துடன் நேரடியாகத் தொடர்புடைய ஒரு விஷயத்தில், மதச் சிறுபான்மையினரிடையே தேவையற்ற அச்சத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தக்கூடிய வகையில் நாடாளுமன்றம் இந்த மசோதாவை நிறைவேற்றியுள்ளது வருத்தமளிப்பதாக அவர் குறிப்பிட்டார். இந்த மசோதா வந்தே மாதரம் பாடலைக் கட்டாயமாகப் பாட வேண்டும் என்று வெளிப்படையாகக் கூறவில்லை என்றாலும், அந்தப் பாடலுக்கு எதிராக "அவமதிப்பு" அல்லது "மரியாதைக் குறைவு" எனக் கருதப்படும் செயல்களைக் குற்றமாக்குகிறது என்றும், இத்தகைய சொற்கள்

தெளிவற்றவையாகவும் தனிநபர் விளக்கத்திற்கு உட்பட்டவையாகவும் இருப்பதால் அவை தவறாகப் பயன்படுத்தப்படும் அபாயம் இருப்பதாகவும் அவர் எச்சரித்தார். உச்சநீதிமன்றத்தின் பிஜோ எம்மானுவேல் தீர்ப்பை மேற்கோள் காட்டிய அவர், உண்மையான மத நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு தேசியப் பாடல் அல்லது குறியீட்டில் மரியாதையுடன் பங்கேற்காமல் இருப்பதற்கான உரிமை இந்திய அரசியலமைப்பால் பாதுகாக்கப்பட்ட அடிப்படை உரிமை என்பதை நினைவூட்டினார். தேசப்பற்று என்பது ஒரு குறிப்பிட்ட பாடலைப் பாடுவதாலோ, முழக்கமிடுவதாலோ அல்லது ஒரு குறியீட்டு செயலின் மூலமாக மட்டுமோ அளவிடப்பட முடியாது என்றும், தேசியச் சின்னங்களின் கண்ணியத்தைப் பாதுகாப்பதுடன் அரசியலமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களும் பாதிக்கப்படாத வகையில் இந்த மசோதாவை மத்திய அரசு மறுபரிசீலனை செய்து தேவையான பாதுகாப்பு அம்சங்களைச் சேர்க்க வேண்டும் என்றும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் வலியுறுத்தியது.

கல்வித் துறையின் தற்போதைய நிலை குறித்து பேசிய ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் துணைத் தலைவர் பேராசிரியர் சலீம் இன்ஜினியர், நீட் தேர்வு தொடர்பான சர்ச்சையைத் தொடர்ந்து மத்திய கல்வி அமைச்சர் பதவி விலகியது, கல்வித் துறை குறித்து மக்களிடையே நிலவும் அதிருப்தியை வெளிப்படுத்துவதாகக் குறிப்பிட்டார். இருப்பினும், ஒருவரை மாற்றுவதால் மட்டும் பல ஆண்டுகளாக கல்வித் துறையில் தேங்கியுள்ள கட்டமைப்புச் சிக்கல்களுக்குத் தீர்வு கிடைக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். சமீபத்தில் வெளியான நிதி ஆயோக் அறிக்கையின்படி, கடந்த பத்து ஆண்டுகளில் நாடு முழுவதும் 94 ஆயிரத்திற்கும் அதிகமான அரசு பள்ளிகள் மூடப்பட்டுள்ளதாகவும், சராசரியாக தினமும் 25 அரசு பள்ளிகள் செயல்பாட்டை நிறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இது பொதுக் கல்வி அமைப்பு தொடர்ந்து பலவீனமடைந்து வருவதற்கும், கல்வியில் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்து வருவதற்கும் கவலைக்குரிய அறிகுறியாகும் என்றும் அவர் கூறினார்.

அரசுப் பள்ளிகள் மூடப்படுவது, பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் நிதி குறைக்கப்படுவது, கல்வி வணிகமயமாக்கப்படுவது, சிறுபான்மையினருக்கான கல்வி உதவித்தொகைகள் சுருக்கப்படுவது மற்றும் கல்விக்கும் வேலைவாய்ப்புக்கும் இடையிலான தொடர்பு பலவீனமடைந்து வருவது ஆகியவை இந்தியக் கல்வி அமைப்பின் திசை, முன்னுரிமைகள் மற்றும் நிர்வாக அணுகுமுறையை முழுமையாக மறுஆய்வு செய்ய வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். கல்விக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) குறைந்தது 6 சதவீதம் ஒதுக்க வேண்டும்; மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகைகள் மற்றும் ஆதரவுத் திட்டங்களை மீண்டும் அமல்படுத்த வேண்டும்; அரசுப் பள்ளிகள் மற்றும் பொதுப் பல்கலைக்கழகங்களை வலுப்படுத்த வேண்டும்; கல்வி நிறுவனங்கள் பாகுபாடின்றி நடத்தப்பட வேண்டும்; தேர்வு மற்றும் மாணவர் சேர்க்கை முறைகளில் சீர்திருத்தம் மேற்கொள்ள வேண்டும்; கல்வியை வேலைவாய்ப்பு மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுடன் இணைக்க வேண்டும்; கல்வி நிறுவனங்களின் தன்னாட்சி மற்றும் கல்விசார் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். மேலும், அரசியலமைப்புச் சட்டத்தின் விழுமியங்கள், ஒழுக்கநெறிகள், பொறுப்புள்ள குடியுரிமை, சமூக நல்லிணக்கம் மற்றும் இந்தியாவின் பன்முகப் பாரம்பரியத்தை மதிக்கும் பண்புகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்புக் கல்வியை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புகள் குறித்து பேசிய பேராசிரியர் சலீம் இன்ஜினியர், அசாம், ஒடிசா, குஜராத், கேரளா உள்ளிட்ட பல மாநிலங்களில் ஏற்பட்டுள்ள பேரிடர் குறித்து கவலை தெரிவித்தார். ஆண்டுதோறும் வெள்ளப் பேரிடர்கள் மீண்டும் மீண்டும் நிகழ்வது, நிவாரண நடவடிக்கைகளை மட்டும் மையப்படுத்திய அணுகுமுறையை மாற்றி, பேரிடர் தடுப்பு, முன்கூட்டிய தயார்நிலை மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன் ஆகியவற்றை மையப்படுத்திய நீண்டகாலத் திட்டங்கள் அவசியம் என்பதை உணர்த்துவதாக அவர் கூறினார்.

மீட்புப் பணிகளும் மனிதாபிமான உதவிகளும் இன்றியமையாதவை என்றாலும், அறிவியல் அடிப்படையிலான ஆற்று நீர் மேலாண்மை, இயற்கை நீர்நிலைகள் மற்றும் சதுப்பு நிலங்களைப் பாதுகாத்தல், வடிகால் அமைப்புகளை மேம்படுத்துதல், முன்எச்சரிக்கை அமைப்புகளை வலுப்படுத்துதல், காலநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய உள்கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பேரிடர் அபாயம் அதிகம் உள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கு திட்டமிட்ட மறுவாழ்வு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற நீண்டகால நடவடிக்கைகளுக்கு அரசுகள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். மேலும், வெள்ள நிவாரணப் பணிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வரும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் தன்னார்வலர்கள் மற்றும் பிற சமூகநல அமைப்புகளின் சேவைகளைப் பாராட்டிய அவர், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசுகள், தன்னார்வ அமைப்புகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் தாராளமாக உதவிக்கரம் நீட்டுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சி

சென்னை, 20.08.2026: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி மாநில தலைமையகத்தில் மாதாந்திர பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சி இன்று காலை 11 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வில், நாட்டில் தற்போது முக்கியத்துவம் பெற்றுள்ள பல்வேறு சமூக மற்றும் தேசியப் பிரச்சினைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

குறிப்பாக, மது மற்றும் போதைக்கு எதிரான மாநிலம் தழுவிய பரப்புரை, கல்வி தொடர்பான கவலையளிக்கும் கள நிலவரம், நாளுக்கு நாள் அதிகரித்து வரும் போதை தொடர்பான குற்றங்கள், வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்தச் சட்ட மசோதா, 2026 (FCRA), தேசிய கௌரவ அவமதிப்பு தடுப்பு (திருத்த) மசோதா, 2026 உள்ளிட்ட முக்கியத் தலைப்புகள் குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி மாநிலத் தலைவர் மௌலவி A. முஹம்மது ஹனீஃபா மன்பயீ அவர்கள் பத்திரிகையாளர்களிடம் விரிவாக உரையாற்றினார். தொடர்ந்து, பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் அவர் விரிவாகப் பதிலளித்தார்.

இந்நிகழ்வில் பங்கேற்ற பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நிருபர்கள் மற்றும் யூடியூப் ஊடகவியலாளர்கள் பல்வேறு முக்கியமான



கேள்விகளை முன்வைத்தனர். குறிப்பாக, காவல் நிலையங்களில் நடைபெறும் படுகொலைகள் குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் கருத்து என்ன, தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதற்கும் அவர்கள் எல்லை தாண்டியதாகக் கூறப்படுவதற்கும் முற்றுப்புள்ளி வைக்க என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும், தவெக ஆட்சியில் மது மற்றும் போதை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது எந்த அளவிற்கு உண்மை, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் மது மற்றும் போதைக்கு எதிரான பிரச்சாரப் பணிகள் தற்போது எவ்வாறு நடைபெற்று வருகின்றன, எதிர்காலத்தில் என்னென்ன திட்டங்கள் உள்ளன, FCRA திருத்தச் சட்டத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் என்ன, தேசிய கௌரவ அவமதிப்பு தடுப்பு (திருத்த) மசோதா, 2026 என்ன கூறுகிறது என்பன உள்ளிட்ட கேள்விகள் எழுப்பப்பட்டன. மேலும், கடந்த ஆட்சியிலும் மதுவிற்பனை தொடர்ந்த நிலையில், தற்போதைய ஆட்சியிலும் அது தொடர்வதாகக் கூறப்படும் சூழலில், மதுவுக்கு ஆதரவான கொள்கையைக் கொண்ட கட்சிகளுடன் முஸ்லிம் அரசியல் கட்சிகள் கூட்டணி அமைப்பது தொடர்பாக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் நிலைப்பாடு என்ன, காவல்துறையில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு போதிய அளவில் ஆட்கள் தேர்வு செய்யப்படாததால் காவலர்கள் கடுமையான மன அழுத்தத்திற்கு உள்ளாவதாக ஒரு காவலரே பேட்டி அளித்துள்ள நிலையில், இது குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் கருத்து என்ன என்பன போன்ற பல்வேறு கேள்விகளையும் பத்திரிகையாளர்கள் முன்வைத்தனர். இக்கேள்விகளுக்கு மாநிலத் தலைவர் மௌலவி A. முஹம்மது ஹனீஃபா மன்பயீ அவர்கள் விரிவான விளக்கங்களுடன் பதிலளித்தார். இந்நிகழ்வில் மாநிலத் துணைத் தலைவர்கள் ஜனாப் T. யூசுப் பாஷா, ஜனாப் K. M. சிராஜ் அஹ்மத், மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் T. அஜீஸ் லுத்புல்லாஹ், V. S. முஹம்மது அமீன், S. N. சிக்கந்தர், மாநில



அமைப்புச் செயலாளர் K. ஜலாலுதீன், மாநில மகளிர் அணி செயலாளர் சகோதரி பாத்திமா ஜலால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், 30-க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நிருபர்கள் மற்றும் யூடியூப் ஊடகவியலாளர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர். நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் பத்திரிகை அறிக்கை, மது மற்றும் போதைக்கு எதிரான "சமரசம்" சிறப்பிதழ் மற்றும் IFT வெளியீடான "போதை அழிவின் பாதை" என்ற புத்தகம் ஆகியவை வழங்கப்பட்டன.

நேபாள வெள்ளப் பேரிடர்: பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி மனிதாபிமான உதவி வழங்க வேண்டும் – ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்

புது தில்லி: நேபாளத்தில் பெரும் உயிர்ச்சேதத்தையும் கடுமையான அழிவையும் ஏற்படுத்தியுள்ள திடீர் வெள்ளப்பெருக்கு குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) துணைத் தலைவர் எஸ். அமீனுல் ஹசன் அவர்கள் ஆழ்ந்த துயரத்தையும் கவலையையும் தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு அவர் அளித்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: "இந்த மாபெரும் துயரமான தருணத்தில் நேபாள மக்களோடு எங்கள்

இதயங்கள் துணை நிற்கின்றன. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பிற்காகவும், அவர்கள் விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்காகவும் பிரார்த்திக்கிறோம்.

மனித உயிர்களைக் காப்பாற்றுவது, காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பது, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உணவு, குடிநீர், தங்குமிடம், மருத்துவ உதவி உள்ளிட்ட அனைத்து வகையான மனிதாபிமான உதவிகளும் கிடைப்பதை உறுதி செய்வது ஆகியவற்றுக்கே தற்போதைய சூழலில் அவசர முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

நேபாளத்தின் நெருங்கிய அண்டை நாடு என்ற முறையில், அந்நாட்டு அதிகாரிகளுடன் இணைந்து இந்தியா தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டும். இதில் பிரத்யேக தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்களை அனுப்புதல், மருத்துவ உதவிகளை வழங்குதல், அவசரகாலப் பொருட்களை அனுப்புதல், போக்குவரத்து சார்ந்த ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் பேரிடர் மேலாண்மைக்குத் தேவையான தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குதல் ஆகியவை அடங்கும். மேலும், செயற்கைக்கோள் கண்காணிப்பு, வானிலை மற்றும் வெள்ள முன்னறிவிப்பு, பேரிடர் மேலாண்மை ஆகிய துறைகளில் இந்தியாவிடம் உள்ள திறன்களைப் பயன்படுத்தி, அடுத்தடுத்த வெள்ளம் மற்றும் நிலச்சரிவு அபாயங்களைக் கணிக்கவும், உடனடி மீட்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தவும் நேபாளத்திற்கு உதவ முடியும்.

இந்தத் துயர நிகழ்வு, இந்தியாவின் பல பகுதிகள் உட்பட ஒட்டுமொத்த இமயமலைப் பிராந்தியமும் தீவிர வானிலை மாற்றங்கள், பனிப்பாறை உறுதியற்ற தன்மை, வெள்ளம் மற்றும் தொடர் பேரிடர்களால் எந்த அளவிற்கு பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளது என்பதை மீண்டும் ஒருமுறை உணர்த்தியுள்ளது. உயர்ந்து வரும் வெப்பநிலை, பனிப்பாறைகள் உருகுதல் மற்றும் கணிக்க முடியாத வானிலை மாற்றங்கள் புதிய அபாயங்களை உருவாக்கி வருகின்றன.

பேரிடர் நிகழ்ந்த பிறகு மட்டுமே நடவடிக்கை எடுக்கும் அணுகுமுறையிலிருந்து மாறி, தடுப்பு நடவடிக்கைகள், பேரிடர் தயார்நிலை மற்றும் நீண்டகால பேரிடர் தாங்கும் திறனை வலுப்படுத்தும் முன்னெடுப்புகளை நோக்கி நாம் நகர வேண்டும். பனிப்பாறைகள், பனிப்பாறை ஏரிகள், நிலையற்ற சரிவுகள் மற்றும் உயரமான நீர்நிலைகளை விரிவான மற்றும் அறிவியல் பூர்வமான முறையில் கண்காணிக்க வேண்டிய அவசரத் தேவை உள்ளது. கீழ்நிலைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு சரியான நேரத்தில் எச்சரிக்கைகள் சென்றடையும் வகையில் செயற்கைக்கோள் படங்கள், தொலை உணர்வுத் தொழில்நுட்பம் (Remote Sensing), கள அளவிலான கண்காணிப்பு மற்றும் நம்பகமான முன்னெச்சரிக்கை அமைப்புகள் வலுப்படுத்தப்பட வேண்டும்.

சுற்றுச்சூழல் ரீதியாக எளிதில் பாதிக்கப்படக்கூடிய இமயமலைப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சாலைகள், நீர்மின் திட்டங்கள், சுற்றுலா உள்கட்டமைப்புகள் மற்றும் பிற வளர்ச்சிப் பணிகளுக்கு அரசுகள் கடுமையான சுற்றுச்சூழல் மற்றும் பேரிடர் அபாய மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும்.

நேபாளத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ அரசுகள், மனிதநேய அமைப்புகள் மற்றும் இப்பிராந்திய மக்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இந்தத் துயரத்தில் பறிபோன உயிர்கள், பேரிடர் அபாயங்களைக் குறைக்கவும், பாதிப்பிற்குள்ளாகும் இமயமலை சமூகங்களைப் பாதுகாக்கவும் அவசரமான மற்றும் நிலையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசுகளையும் கொள்கை வகுப்பாளர்களையும் தூண்டும் என்று நம்புகிறோம்.”

சஹாரன்பூர் வரலாற்றுச் சிறப்புமிக்க மசூதி இடிப்பு: சட்டத்தின் ஆட்சிக்கும் மதச் சுதந்திரத்திற்கும் எதிரானது – ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கடும் கண்டனம்

புதுதில்லி: உத்தரபிரதேச மாநிலம் சஹாரன்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்திருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மசூதி இடிக்கப்பட்டதற்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) துணைத் தலைவர் மலிக் முஹ்தசிம் கான் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கை இந்திய ஜனநாயகத்தின் மீதான கறை என்றும், நாட்டில் மதச் சுதந்திரம் மற்றும் சொத்துரிமை பாதுகாப்பு குறித்த கடுமையான கேள்விகளை இது எழுப்புகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து ஊடகங்களுக்கு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “சஹாரன்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்திருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மசூதி இடிக்கப்பட்டதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இது அரசியல் துதிபாடுதலின் வெட்கக்கேடான, மன்னிக்க முடியாத செயலாகும். சஹாரன்பூர் அதிகாரிகள் இதன் மூலம் தங்களது பாரபட்சமான, மதவெறி மனநிலையை உலகுக்கு அம்பலப்படுத்தியதைத் தவிர வேறு எதையும் சாதித்துவிடவில்லை. இந்த ஒட்டுமொத்த சம்பவமும் இந்திய ஜனநாயகத்தின் மீதான கறையாகும். நாட்டின்

நிர்வாகத்தின் மீதும், சிறுபான்மையினரின் உரிமைகள் கையாளப்படும் விதம் குறித்தும் இது பெரும் நிழலை ஏற்படுத்தியுள்ளது. அரசியலமைப்புச் சட்டப் பாதுகாப்புகளைச் சீர்குலைத்து, சட்டத்தின் ஆட்சியை ஆட்சியாளர்களின் விருப்பத்திற்கேற்ப குறைக்கும் பெரும்பான்மைவாத அரசியலின் மிக மோசமான உதாரணங்களில் ஒன்றாக சஹாரன்பூர் மசூதி இடிப்பு வரலாற்றில் பதியப்படும்" என்று தெரிவித்துள்ளார். மேலும், இடிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ள வழிகாட்டுதல்கள் இந்த நடவடிக்கையின் மூலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், "பல தசாப்தங்களாகப் பயன்பாட்டில் இருந்த ஒரு வழிபாட்டுத் தலத்தின் நிலையை அதிகாரத்தில் இருப்பவர்களின் விருப்பத்திற்கேற்ப முடிவு செய்ய முடியும் என்றால், சட்டத்தின் ஆட்சியின் மீதான நம்பிக்கை முற்றிலும் தகர்ந்துவிடும். வக்ஃப், பட்டா, உடைமை போன்ற சட்டப்பூர்வ விவகாரங்கள் புல்டோசர்கள் மூலம் தீர்க்கப்பட்டால், நீதித்துறையே பயனற்றதாகிவிடும். இந்த விவகாரத்தில் உயர் நீதிமன்றமோ அல்லது உச்ச நீதிமன்றமோ தாமாக முன்வந்து (Suo Motu) தலையிட வேண்டாமா? அரசியலமைப்பு ஜனநாயகத்தின் அடித்தளத்தை அசைக்கும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்து ஜனநாயகவாதிகளும் குரல் எழுப்ப வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார். மேலும், வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல்களில் வாக்குகளைப் பெறுவதற்காக வெறுப்பு அரசியலை முன்னெடுப்பவர்கள், பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளிலிருந்து கவனத்தைத் திசைதிருப்ப முயல்கின்றனர் என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். "நிர்வாகத்தின் சட்டவிரோத நடவடிக்கைகளால் முஸ்லிம்களின் மார்க்கம், அடையாளம், கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களுடனான பிணைப்பை பலவீனப்படுத்திவிட முடியாது. ஒரு வழிபாட்டுத் தலத்தை இடிப்பது சட்டப்பூர்வத் தகராறைத் தீர்ப்பதற்கான வழியாகாது. தன்னிச்சையான அதிகாரப் பிரயோகத்தை விடுத்து, நீதியும் சட்டத்தின் ஆட்சியும் மட்டுமே நிலைநிறுத்தப்பட வேண்டும்" என்றும் மலிக் முஹ்தசிம் கான் தெரிவித்துள்ளார்.

சாகேத் காவல் நிலையத்தில் பெண் பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்:

புது தில்லி: தில்லி சாகேத் காவல் நிலையத்தில் பெண் பத்திரிகையாளர்களான ஷாஹீன் கான் மற்றும் நபீஸா கான் மீது நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல் மற்றும் அத்துமீறல்களை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) வன்மையாகக் கண்டித்துள்ளது. இச்சம்பவம் குறித்து உடனடியாக, பக்கச்சார்பற்ற மற்றும் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் JIH வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக JIH தேசிய செயலாளர் திருமதி ரஹ்மத்துன்னிஸா அப்துர் ரஸாக் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், "சாகேத் காவல் நிலையத்தில் இரண்டு பெண் பத்திரிகையாளர்கள் மீது நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதலையும் முறைகேடான நடத்தையையும் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். சாகேத் பகுதியில் நிகழ்வு ஒன்றைப் படம்பிடித்துக் கொண்டிருந்தபோது தங்களைத் தடுத்து நிறுத்தியதாகவும், பின்னர் காவல் நிலையத்திற்குள் வைத்து தாக்கியதாகவும் அப்பெண்கள் குற்றம்சாட்டியுள்ளனர். அவர்கள் முன்வைத்துள்ள புகார்கள் மிகுந்த அதிர்ச்சியளிக்கின்றன. இருவரும் முஸ்லிம்கள் என்பதைத் தெரிந்துகொண்ட பிறகு, காவல்துறையினர் தங்களை மேலும் கொடூரமாகத் தாக்கியதாக அவர்கள் கூறியுள்ளனர். எனவே, இத்தாக்குதலானது பெண்களின் தனிப்பட்ட கண்ணியத்தின் மீதான தாக்குதல் மட்டுமல்லாமல், தில்லி காவல்துறையின் மதவெறுப்பு அணுகுமுறை மற்றும் மதரீதியான பாகுபாடு குறித்தும் தீவிரமான கவலைகளை எழுப்புகிறது. பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செயல்படுத்த வேண்டிய கட்டாயம் இருந்தாலோ அல்லது விதிமீறல்களைக் கையாள வேண்டிய சூழல் ஏற்பட்டாலோ கூட, காவல்துறையின் நடவடிக்கைகள் சட்டத்தின் எல்லைக்குள்ளும், விகிதாசார வரம்பிற்குள்ளும் மட்டுமே இருக்க வேண்டும். எந்தவொரு நடைமுறை மீறலும் காவலில் நிகழ்த்தப்படும் வன்முறை, அவமதிப்பு அல்லது பாகுபாட்டை நியாயப்படுத்த முடியாது. குறிப்பாக, சுதந்திரமாகப் பணியாற்றும் பெண் பத்திரிகையாளர்கள் அச்சமோ, பழிவாங்கும் அச்சுறுத்தலோ இன்றி தங்களது தொழில்சார் பணிகளை மேற்கொள்ளும் சூழல் உறுதி செய்யப்பட வேண்டும். இந்திய மகளிர் பத்திரிகையாளர் சங்கம் (IWPC), தில்லி பத்திரிகையாளர் சங்கம் (DUJ), பிரஸ் அசோசியேஷன் மற்றும் கேரள உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் (KUWJ) ஆகியவை முன்வைத்துள்ள பக்கச்சார்பற்ற விசாரணைக்கான கோரிக்கையை நாங்கள் ஆதரிக்கிறோம். இந்த விசாரணை வெளிப்படையானதாகவும், பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையிலும் இருப்பதை தில்லி காவல் ஆணையர் உறுதி செய்ய வேண்டும். தொடர்புடைய அனைத்து சிசிடிவி காட்சிகள், மருத்துவ ஆவணங்கள், காணொளிகள் மற்றும் பிற சான்றுகள் முறையாகப் பாதுகாக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட வேண்டும். தவறிழைத்தவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொதுவாழ்விலும் தொழில்சார் களத்திலும் பெண்களின் பாதுகாப்பு குறித்த விரிவான கேள்விகளை இச்சம்பவம் எழுப்பியுள்ளது. தங்களது தொழில்முறை மற்றும் அரசியலமைப்புச் சுதந்திரங்களைப் பயன்படுத்தும் பெண்களுக்கு எதிராக வன்முறை, மிரட்டல் அல்லது அவமதிப்பு நிகழ்வதை வேடிக்கை பார்த்துக்கொண்டு, ஒரு ஜனநாயக சமூகம் பெண்களின் கண்ணியத்தை மதிப்பதாகக் கூறிக்கொள்ள முடியாது. மேலும், மத அடையாளம் என்பது எந்தவொரு

பாகுபாட்டிற்கும் பாரபட்சத்திற்கும் அடிப்படையாக மாறிவிடக்கூடாது. பெண்கள், சிறுபான்மையினர் மற்றும் பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பது அரசியலமைப்பு வழங்கிய கடமையாகும். ஆனால், சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய அமைப்புகள் அந்தக் கடமையை நிறைவேற்றத் தவறிவிட்டதாகக் கூறப்படும் இச்சம்பவம் தீவிர கவலையை ஏற்படுத்துகிறது. பாதிக்கப்பட்ட இரண்டு பத்திரிகையாளர்களுக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்யவும், பெண்கள் மீதான வன்முறை, மதவெறுப்பு மற்றும் பத்திரிகை சுதந்திரத்தின் மீதான தாக்குதல்கள் எக்காரணம் கொண்டும் சகித்துக்கொள்ளப்படாது என்ற தெளிவான செய்தியைச் சமூகத்திற்கு உணர்த்தவும் பொறுப்புள்ள அனைத்து அமைப்புகளும் முன்வர வேண்டும்" என அவர் வலியுறுத்தியுள்ளார்.

நேபாள வெள்ளப் பேரிடர்: பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்க வேண்டும் – ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்

புது தில்லி: நேபாளத்தில் பெரும் உயிரிழப்புகளையும் கடுமையான அழிவையும் ஏற்படுத்தியுள்ள திடீர் வெள்ளப்பெருக்கு குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) துணைத் தலைவர் எஸ். அமீனுல் ஹசன் அவர்கள் தனது ஆழ்ந்த துயரத்தையும் கவலையையும் தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு அவர் அளித்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: "இந்த மாபெரும் துயரமான தருணத்தில் நேபாள மக்களோடு எங்கள் இதயங்கள் துணை நிற்கின்றன. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பிற்காகவும் அவர்கள் விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்பவும் பிரார்த்திக்கிறோம். மனித உயிர்களைக் காப்பாற்றுவது, காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பது, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உணவு, குடிநீர், தங்குமிடம், மருத்துவ உதவி உள்ளிட்ட அனைத்து வகையான மனிதாபிமான உதவிகளும் கிடைப்பதை உறுதி செய்வது ஆகியவற்றுக்கே தற்போதைய அவசர முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். நேபாளத்தின் நெருங்கிய அண்டை நாடு என்ற முறையில், அந்நாட்டு அதிகாரிகளுடன் இணைந்து இந்தியா தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டும். இதில் சிறப்பு தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்கள், மருத்துவ உதவிகள், அவசரகாலப் பொருட்கள், போக்குவரத்து சார்ந்த ஏற்பாடுகள் மற்றும் பேரிடர் மேலாண்மைக்குத் தேவையான தொழில்நுட்ப நிபுணத்துவம் ஆகியவை அடங்கும். மேலும், செயற்கைக்கோள் கண்காணிப்பு, வானிலை மற்றும் வெள்ள முன்னறிவிப்பு, பேரிடர் மேலாண்மை ஆகிய துறைகளில் இந்தியாவின் திறன்களைப் பயன்படுத்தி, அடுத்தடுத்த வெள்ளம் மற்றும் நிலச்சரிவு அபாயங்களைக் கணிக்கவும், உடனடி மீட்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தவும் நேபாளத்திற்கு உதவ முடியும். இந்தத் துயர நிகழ்வானது, இந்தியாவின் பல பகுதிகள் உட்பட ஒட்டுமொத்த இமயமலைப் பிராந்தியமும் தீவிர வானிலை மாற்றங்கள், பனிப்பாறை உறுதியற்ற தன்மை, வெள்ளம் மற்றும் தொடர் பேரிடர்களால் எந்த அளவிற்குப் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளது என்பதை மீண்டும் ஒருமுறை உணர்த்தியுள்ளது. உயர்ந்து வரும் வெப்பநிலை, பனிப்பாறைகள் உருகுதல் மற்றும் கணிக்க முடியாத வானிலை மாற்றங்கள் புதிய அபாயங்களை உருவாக்கி வருகின்றன. பேரிடர் நிகழ்ந்த பிறகு மட்டுமே நடவடிக்கை எடுக்கும் போக்கிலிருந்து மாறி, தடுப்பு நடவடிக்கைகள், தயார்நிலை மற்றும் நீண்டகால பேரிடர் தாங்கும் திறன் ஆகியவற்றை நோக்கிய முன்னெடுப்புகளுக்கு நாம் நகர வேண்டும். பனிப்பாறைகள், பனிப்பாறை ஏரிகள், நிலையற்ற சரிவுகள் மற்றும் உயரமான நீர்நிலைகளை விரிவான மற்றும் அறிவியல் பூர்வமான முறையில் கண்காணிக்க வேண்டிய அவசரத் தேவை உள்ளது. கீழ்நிலைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு சரியான நேரத்தில் எச்சரிக்கைகள் சென்றடையும் வகையில் செயற்கைக்கோள் படங்கள், தொலை உணர்வுத் தொழில்நுட்பம் (Remote Sensing), கள அளவிலான கண்காணிப்பு மற்றும் நம்பகமான முன்னெச்சரிக்கை அமைப்புகள் வலுப்படுத்தப்பட வேண்டும். சுற்றுச்சூழல் ரீதியாக எளிதில் பாதிப்படையக்கூடிய இமயமலைப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சாலைகள், நீர்மின் திட்டங்கள், சுற்றுலா உள்கட்டமைப்புகள் மற்றும் பிற வளர்ச்சிப் பணிகளுக்கு அரசுகள் கடுமையான சுற்றுச்சூழல் மற்றும் பேரிடர் அபாய மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும். நேபாளத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ அரசுகள், மனிதநேய அமைப்புகள் மற்றும் இப்பிராந்திய மக்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். இந்தத் துயரத்தில் பறிபோன உயிர்கள், பேரிடர் அபாயங்களைக் குறைக்கவும், பாதிப்பிற்குள்ளாகும் இமயமலை சமூகங்களைப் பாதுகாக்கவும் அவசர மற்றும் நிலையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசுகளையும் கொள்கை வகுப்பாளர்களையும் தூண்டும் என்று நம்புகிறோம்."

பத்திரிகையாளர் சந்திப்பில் சாதியப் பாகுபாடு, SIR மற்றும் மத சுதந்திரம் குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கருத்து

புதுதில்லி: கடந்த ஆகஸ்ட் 26 அன்று போத்தே கோஷி திரிசூலி நதிப் படுகைப் பகுதிகளில் ஏற்பட்ட கடுமையான திடீர் வெள்ளப்பெருக்கைத் தொடர்ந்து, கள நிலவரத்தை ஆய்வு செய்வதற்காக நேபாளத்திற்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்ட ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் (JIH) மூன்று பேர் கொண்ட



தூதுக்குழு தில்லி திரும்பியுள்ளது. இத்தூதுக்குழு பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று, பொதுமக்கள் மற்றும் உள்ளூர் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி, பேரிடரால் ஏற்பட்டுள்ள மனிதநேயத் தேவைகளை மதிப்பீடு செய்தது. கள ஆய்வின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில், நேபாள நாட்டின் சட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு, அவசரகால நிவாரண நடவடிக்கைகளை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திட்டமிட்டு தொடங்கியுள்ளது. மாதாந்திர பத்திரிகையாளர் சந்திப்பில் பேசிய ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் தேசியச் செயலாளர் மௌலானா ஷஃபி மதனீ, பேரிடரின் தாக்கம் மிகக் கடுமையாக உள்ளதாகவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உணவு, தங்குமிடம், மருத்துவ உதவி, பாதுகாப்பான குடிநீர் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை உடனடியாக வழங்குவதே முதன்மைப் பணியாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். நேபாள அரசும் அதன் பேரிடர் மீட்பு அமைப்புகளும் மிகுந்த சவாலான சூழலிலும் பாராட்டுக்குரிய பணிகளை மேற்கொண்டு வருகின்றன. எனினும், பேரிடரின் பரந்துபட்ட தீவிரத்தைக் கருத்தில் கொள்ளும்போது அரசு நிர்வாகங்களுக்கும் சில நடைமுறை வரம்புகள் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாலும், இடிபாடுகளிலிருந்து மக்கள் தொடர்ந்து உயிருடன் மீட்கப்பட்டு வருவதாலும், இப்போதே நீண்டகால மறுவாழ்வுத் தேவைகள் குறித்து இறுதி முடிவுக்கு வருவதோ அல்லது விரிவான திட்டங்களை வகுப்பதோ இயலாது என்றும் அவர் தெரிவித்தார். மேலும், பேரிடரில் குடும்பத்தினர், வீடுகள், வாழ்வாதாரம் மற்றும் உடமைகளை இழந்தவர்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து நேபாள அரசு இதுவரை எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பையும் வெளியிடாதது கவலைக்குரிய அம்சமாக உள்ளது என்றும் மௌலானா ஷஃபி மதனீ சுட்டிக்காட்டினார். தற்போதைய சூழலில் மீட்பு மற்றும் அவசரகால நிவாரணப் பணிகளுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கருதுகிறது என்றும், கள நிலைமையை அடிப்படையாகக் கொண்டு, உள்ளூர் சட்ட விதிகளுக்கு உட்பட்டு மட்டுமே இக்கட்டத்தில் வரையறுக்கப்பட்ட அவசரகால நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். மீட்புப் பணிகள் முழுமையாக நிறைவடைந்து, இழப்புகள் துல்லியமாக மதிப்பிடப்பட்டு, மக்களின் தேவைகள் தெளிவாகத் தெரியவந்த பின்னரே நீண்டகால மறுவாழ்வு மற்றும் மறுகட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள இயலும் என்றும் அவர் கூறினார். மீட்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வரும் நேபாள அரசு, பாதுகாப்புப் படைகள், உள்ளூர் மக்கள் மற்றும் மனிதநேய அமைப்புகளின் முயற்சிகளைப் பாராட்டியதுடன், நிவாரணப் பணிகளுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும் செய்ய ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தயாராக உள்ளது என்றும் தெரிவித்தார். தொடர்ந்து, பத்திரிகையாளர் சந்திப்பில் உரையாற்றிய ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் துணைத் தலைவர் பேராசிரியர் சலீம் எஞ்சினியர் (பொறியாளர் முஹம்மது சலீம்), அரசியலமைப்புப் பாதுகாப்புகளும் முற்போக்கான சட்டங்களும் நடைமுறையில் இருந்தபோதிலும், சாதியப் பாகுபாடுகளும் வன்கொடுமைகளும் தொடர்வது குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்தார். 2023ஆம் ஆண்டில் பட்டியல் சாதியினருக்கு (SC) எதிராக 57,789 குற்றங்கள் பதிவாகியுள்ளதாகவும், பழங்குடியினருக்கு (ST) எதிரான குற்றங்களும் நீண்டகால நோக்கில் கணிசமாக அதிகரித்துள்ளதாகவும் தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) புள்ளிவிவரங்கள் காட்டுவதாக அவர் தெரிவித்தார். மத்தியப் பிரதேசத்தில் தலித் பள்ளி மாணவர் ஒருவர் தாக்கப்பட்டு சாதிய ரீதியாக இழிவுபடுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவமும், ராஜஸ்தானில் இரு தலித் இளைஞர்கள் அவமதிக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவங்களும், சாதியத் தப்பெண்ணங்கள் மக்களின் கண்ணியத்தையும் பாதுகாப்பையும் தொடர்ந்து அச்சுறுத்துகின்றன என்பதை வெளிப்படுத்துகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். SC/ST வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் போன்ற சட்டங்கள் அவசியமானவை என்றாலும், மனிதர்களை இழிவுபடுத்துவதையும் ஒதுக்கி வைப்பதையும் இயல்பாகக் கருதும் சமூக மனநிலையை சட்டங்களால் மட்டுமே மாற்ற முடியாது என்றும் அவர் தெரிவித்தார். நடைமுறையிலுள்ள சட்டங்களை உறுதியாகச் செயல்படுத்துதல், விரைவான புலன்விசாரணை மற்றும் வழக்கு விசாரணை, பாதிக்கப்பட்டவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றுடன், பாகுபாட்டு மனநிலையை மாற்றும் தொடர்ச்சியான அறநெறி மற்றும் கல்விசார் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். பிறப்பு, சாதி, இனம் அல்லது சமூக அந்தஸ்தின் அடிப்படையிலான அனைத்து விதமான பாகுபாடுகளையும் இஸ்லாம் முற்றிலுமாக நிராகரிக்கிறது என்றும், ஒவ்வொரு மனிதனின் இயல்பான கண்ணியத்தையும் அது அங்கீகரிக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இதனையடுத்து, செய்தியாளர்களிடம் பேசிய ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் துணைத் தலைவர் எஸ். அமீனுல் ஹசன், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR) தொடர்பாக கடுமையான

கவலை தெரிவித்தார். SIR நடவடிக்கையின் மூலம் உண்மையான வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு, அவர்களின் வாக்குரிமை பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக அவர் தெரிவித்தார். மகாராஷ்டிரா, தில்லி, தெலங்கானா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் பெருமளவில் பெயர்கள் நீக்கப்பட்டதையும், குறிப்பாக மேற்கு வங்கத்தில் SIR மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்களால் தீர்த்து வைக்கப்பட்ட 82,782 வழக்குகளில் 75,443 பெயர்கள் (91%) மீண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார். தனது பெயர் விடுபட்டுள்ளதைக் கண்டறிந்து, சிக்கலான உரிமைகோரல் மற்றும் மேல்முறையீட்டு நடைமுறைகளை வெற்றிகரமாகக் கடந்து வருவதை மட்டுமே ஒரு குடிமகனின் வாக்குரிமைக்கான ஆதாரமாக மாற்றிவிட முடியாது என்றும் அவர் கூறினார். மத சுதந்திரம் குறித்துப் பேசிய எஸ். அமீனுல் ஹசன், இந்தியாவில் மத சுதந்திரம் மற்றும் மனசாட்சியின் சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில் அதிகரித்து வரும் சட்டக் கட்டுப்பாடுகளும் சமூகத் தடைகளும் ஆழ்ந்த கவலையளிப்பதாக தெரிவித்தார். சஹாரன்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பள்ளிவாசல் சமீபத்தில் இடிக்கப்பட்ட சம்பவம் இந்திய ஜனநாயகத்தின் மீதான கறை என்றும், இது மத சுதந்திரம், சிறுபான்மையினர் உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பது குறித்துப் பலத்த கேள்விகளை எழுப்பியுள்ளது என்றும் அவர் கூறினார். மேலும், இடிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக உச்சநீதிமன்றம் வகுத்துள்ள தெளிவான வழிகாட்டுதல்கள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளனவா என்ற தீவிரமான கேள்வியையும் இந்நடவடிக்கை எழுப்புகிறது என்றும் தெரிவித்தார். பல தசாப்தங்களாகப் பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்துவரும் ஒரு வழிபாட்டுத் தலத்தின் நிலையை சில தன்னிச்சையான தலைவர்களும் அதிகாரிகளும் முடிவு செய்ய முடியும் என்றால், நமது ஒட்டுமொத்த அரசியல் அமைப்பின் மீதும், நல்லாட்சி மற்றும் சட்டத்தின் ஆட்சியின் மீதும் மக்களுக்கு உள்ள நம்பிக்கை தகர்ந்துவிடும் என்றும் அவர் எச்சரித்தார். இதேபோல், தில்லி சாகேத் காவல் நிலையத்தில் முஸ்லிம் பெண் பத்திரிகையாளர்களான ஷாஹீன் கான், நஃபீஸா கான் ஆகியோர் தாக்கப்பட்டதாகவும் அவமதிக்கப்பட்டதாகவும் கூறப்படும் சம்பவத்தைக் குறிப்பிட்ட எஸ். அமீனுல் ஹசன், ஒருவரது மத அடையாளம் பாகுபாட்டிற்கோ அல்லது பாரபட்சமான அணுகுமுறைக்கோ காரணமாக அமையக் கூடாது என்று வலியுறுத்தினார். மனசாட்சியின் சுதந்திரம், மத சுதந்திரம் மற்றும் பத்திரிகை சுதந்திரம் ஆகியவை அச்சம், மிரட்டல் அல்லது சட்டவிரோதத் தலையீடுகள் இன்றி ஒவ்வொரு குடிமகனுக்கும் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். தன்னிச்சையான அதிகாரப் பயன்பாட்டிற்குப் பதிலாக நீதி, உரிய சட்ட நடைமுறைகள் மற்றும் அரசியலமைப்பு உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோருகிறது.

சத்ய நிகேதன் கட்டட விபத்துப் பகுதியை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் குழு நேரில் பார்வையிட்டது.

புதுடெல்லி: டெல்லி சத்ய நிகேதன் பகுதியில் மாணவர்கள் தங்கி இருந்த ஐந்து மாடிக் கட்டடம் இடிந்து விழுந்து, ஏழு மாணவர்கள் உயிரிழந்ததோடு பலர் படுகாயமடைந்துள்ள கோரச் சம்பவம் குறித்து, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் தேசிய துணைத் தலைவர் பேராசிரியர் சலீம் பொறியாளர் (Prof. Salim Engineer) தனது ஆழ்ந்த வேதனையைத் தெரிவித்துள்ளார். உயிரிழந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு தனது இதயப்பூர்வமான இரங்கலையும், பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதலையும்



ஆதரவையும் அவர் தெரிவித்துள்ளார். உயர்கல்விக்காக டெல்லிக்கு வரும் இளம் தலைமுறையினருக்கு பாதுகாப்பான, கண்ணியமான தங்குமிடம் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதையும், மாணவர் தங்குமிடங்களில் நிலவும் கடுமையான குறைபாடுகளையும் இந்தச் சோகச் சம்பவம் மீண்டும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். விபத்து நிகழ்ந்த இடத்தை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் முக்கியப் பிரதிநிதிகள் குழு நேரில் சென்று பார்வையிட்டு, கள நிலவரத்தை ஆய்வு செய்ததுடன், அப்பகுதி மக்களிடம் சம்பவம் தொடர்பான தகவல்களையும் கேட்டறிந்தது. இக்குழுவில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் துணைத் தலைவர் பேராசிரியர் சலீம் பொறியாளர், தேசியச் செயலாளர்கள் மௌலானா ஷஃபி மதானி, ஐ. கரீமுல்லாஹ், அதீகுர் ரஹ்மான் மற்றும் சல்மான் அஹ்மத் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். ஊடகங்களுக்குப் பேட்டியளித்த பேராசிரியர் சலீம் பொறியாளர், "இந்தப் பார்வையின்போது நாங்கள் கண்ட காட்சிகளும், கேட்டறிந்த தகவல்களும் மிகுந்த மனவேதனையை ஏற்படுத்துகின்றன. இந்தச் சோகச் சம்பவத்தை வெறுமனே எதிர்பாராத கட்டட விபத்து எனக் கூறி எளிதாகக் கடந்துவிட முடியாது. இதற்கான பொறுப்புடைமை உறுதி செய்யப்பட வேண்டும்.

உயிரிழந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணமும் இழப்பீடும் வழங்கப்பட வேண்டும். கட்டடம் இடிந்து விழுந்ததற்கான காரணங்கள் குறித்து வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும். அலட்சியம், விதிமீறல்கள் அல்லது கண்காணிப்புக் குறைபாடுகளுக்குக் காரணமானவர்கள் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்று தெரிவித்தார். மேலும், டெல்லி பல்கலைக்கழகம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலவும் கடுமையான மாணவர் தங்குமிட நெருக்கடியே இதுபோன்ற சூழல்களுக்கு காரணமாக இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், கல்லூரிகளில் போதுமான விடுதி வசதிகள் இல்லாததால் வெளிமாநிலங்களில் இருந்து கல்வி கற்க வரும் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தனியார் வாடகை வீடுகளையும், பேயிங் கெஸ்ட் (PG) தங்குமிடங்களையும் நாட வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாகத் தெரிவித்தார். மாணவர்களின் அதிகப்படியான தங்குமிடத் தேவையைப் பயன்படுத்தி, போதிய பாதுகாப்பற்ற கட்டடங்களில் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் நெருக்கடியாகத் தங்க வைக்கப்படும் சூழல் உருவாகியுள்ளதாகவும் அவர் கூறினார். எனவே, மாணவர்களுக்குத் தேவையான தரமான மற்றும் மலிவு விலையிலான விடுதி வசதிகளை மேம்படுத்த அரசும் சம்பந்தப்பட்ட நிர்வாக அமைப்புகளும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், சத்ய நிகேதன் போன்ற மாணவர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் இயங்கி வரும் விடுதிகள் மற்றும் தனியார் PG கட்டடங்களில் உடனடியாக கட்டட உறுதித்தன்மைத் தணிக்கை (Structural Audit) மற்றும் விரிவான பாதுகாப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். தங்குமிடத் தேவையைக் காரணம் காட்டி பாதுகாப்பு விதிமுறைகள், அவசரகால வெளியேறும் வழிகள், கட்டட அனுமதிகள் மற்றும் அத்தியாவசியப் பாதுகாப்பு நெறிமுறைகளில் எந்தவித சமரசமும் அனுமதிக்கக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார். இதேவேளை, இந்தக் கோர விபத்தைக் கண்டித்தும் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தும் போராடி வரும் மாணவர் அமைப்புகளுக்கும் பொதுமக்களுக்கும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் முழுமையான ஆதரவைத் தெரிவிப்பதாகக் கூறிய அவர், அவர்களின் நியாயமான கோரிக்கைகளை அதிகாரிகள் புறக்கணிக்காமல் உடனடியாகக் கேட்டறிந்து, போராடும் மாணவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் அச்சங்களையும் தேவைகளையும் புரிந்துகொண்டு உறுதியான தீர்வுகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். ஒழுங்குமுறை குறைபாடுகள், நிறுவனக் கட்டமைப்புப் பற்றாக்குறை அல்லது வணிக ரீதியான சுயநலன்களுக்காக இளம் மாணவர்களின் உயிர்களை ஆபத்துக்குள்ளாக்க முடியாது என்றும், இதுபோன்ற தடுக்கக்கூடிய பேரிடர்கள் மேலும் இளம் உயிர்களைப் பறித்துவிடாத வகையில், இந்தச் சம்பவத்திற்குரிய பொறுப்புடைமையை நிலைநாட்டுவதுடன் கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்களையும் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

டெல்லியில் காவல்துறையினரால் தாக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு JIH தலைவர்கள் ஆறுதல்; சட்டப்பூர்வ நடவடிக்கைக்கு வலியுறுத்தல்

புதுடெல்லி: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் (JIH) அகில இந்தியப் பொறுப்பாளர்கள், டெல்லியில் காவல்துறை அதிகாரிகளால் தாக்கப்பட்டு அவமதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பத்திரிகையாளர்கள் ஷாஹீன் கான், நஃபிசா கான் மற்றும் அவர்களது குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்ததுடன், தங்களது முழுமையான ஆதரவையும் தெரிவித்தனர். JIH துணைத் தலைவர் பேராசிரியர் சலீம் இன்ஜினியர் மற்றும் தேசியச் செயலாளர்கள் ஐ. கரீமுல்லா, சல்மான் அஹ்மத் ஆகியோர் அடங்கிய குழுவினர் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரைச் சந்தித்தனர். இந்தச் சந்திப்பின்போது, எந்தவித நியாயமான காரணமோ சட்டப்பூர்வ அனுமதியோ இன்றி டெல்லி காவல்துறையினர் தங்களை எவ்வாறு துன்புறுத்தி தாக்கினர் என்பது



குறித்து பத்திரிகையாளர்கள் விவரித்தனர். குறிப்பாக, தாங்கள் இஸ்லாமிய சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அதிகாரிகள் அறிந்துகொண்ட பின்னர், தாக்குதலின் தீவிரம் மேலும் அதிகரித்ததாக அவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர். அச்சுறுத்தல்களையும் மீறி நீதிக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வரும் ஷாஹீன் கான் மற்றும் நஃபிசா கான் சகோதரிகளின் துணிச்சலையும் உறுதியையும் JIH தலைவர்கள் பாராட்டினர். மத அடையாளத்தின் அடிப்படையில் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் இந்தத் தாக்குதல் குறித்து கவலை தெரிவித்த பேராசிரியர் சலீம் இன்ஜினியர், எந்தவொரு குடிமகனுக்கும் FIR பதிவு செய்வதற்கான உரிமை மறுக்கப்படக் கூடாது என்றும், குற்றம் நடந்ததா இல்லையா என்பதை இறுதியாக நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டிய நிலையில், சட்டப்பூர்வமான விசாரணை நடைபெறுவதற்கான முதல் கட்டமாகப் புகார் குறித்து உடனடியாக FIR பதிவு செய்யப்பட

வேண்டும் என்றும் வலியுறுத்தினார். சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகள் மீது உரிய வழக்குப் பதிவு செய்து, பாரபட்சமற்ற மற்றும் வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். மேலும், குடிமக்களிடம் கனிவுடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ளும் வகையில் காவல்துறை அதிகாரிகளுக்கு முறையான விழிப்புணர்வும் பயிற்சியும் வழங்கப்பட வேண்டும் என்றும், நாட்டில் விரிவான காவல்துறை சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் பேராசிரியர் சலீம் இன்ஜினியர் குறிப்பிட்டார். நீதியும் நியாயமும் நிலைநாட்டப்படும் வரையில், பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் சட்டப்பூர்வ ஆதரவையும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தொடர்ந்து வழங்கும் என்று சந்திப்புக் குழுவினர் உறுதியளித்தனர்.

ரஷ்ய எண்ணெய் விவகாரத்தில் அமெரிக்காவின் வரி விதிப்பு மிரட்டல் இந்திய மக்கள் மீது சுமையாக இருக்கக் கூடாது

புது தில்லி: இந்தியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து ரஷ்ய எண்ணெய் மற்றும் எரிவாயுவை வாங்கும் நாடுகள் மீது 100 சதவீதம் வரை சுங்கவரி விதிக்க அமெரிக்க அதிபருக்கு அதிகாரம் வழங்கும் மசோதாவை அமெரிக்க நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளதற்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) அமைப்பின் துணைத் தலைவர் எஸ். அமீனுல் ஹசன் கவலை தெரிவித்துள்ளார். இது குறித்து ஊடகங்களுக்கு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2026ஆம் ஆண்டின் லிண்ட்சே ஓ. கிரஹாம் ரஷ்யா மற்றும் ஈரான் மீதான தடைகள் சட்டத்தை (Lindsey O. Graham Sanctioning Russia and Iran Act of 2026) ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் வன்மையாகக் கண்டிக்கிறது. இந்தச் சட்டம், ரஷ்யா-உக்ரைன் போருக்கு எதிரான அமெரிக்காவின் நிலைப்பாட்டை இராஜதந்திர நடவடிக்கைகளைக் கடந்து, கடுமையான மற்றும் தண்டனைக்குரிய பொருளாதார நடவடிக்கைகளாக விரிவுபடுத்துகிறது. இந்த அணுகுமுறை அறநெறி மற்றும் பொருளாதாரம் ஆகிய இரு கோணங்களிலும் கவலைக்குரியதாகும். முதலாவதாக, சுங்கவரிகள் இறக்குமதியாளர்கள் மீது விதிக்கப்பட்டாலும், அதன் இறுதிச் சுமை அமெரிக்க நுகர்வோர், இந்திய ஏற்றுமதியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் சிறு வணிகர்கள் மீது சுமத்தப்படக்கூடும். 2025ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்கான இந்தியாவின் ஏற்றுமதி சுமார் 104 பில்லியன் டாலர்களாக இருந்தது. தங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லாத ஒரு புவிசார் அரசியல் மோதலின் விலைக்காக சாதாரண இந்தியத் தொழிலாளர்களும் அவர்களின் குடும்பத்தினரும் ஏன் பாதிக்கப்பட வேண்டும்? நிறுவப்பட்ட எரிசக்தி விநியோகத்தில் ஏற்படும் எந்தவொரு திடீர் இடையூறும் போக்குவரத்து, தொழில்துறை, உணவுப் பொருட்களின் விலை மற்றும் குடும்பங்களின் வரவு-செலவுத் திட்டங்களைப் பாதிக்கக்கூடும். இரண்டாவதாக, அமெரிக்காவின் அழுத்தத்தால் இந்தியா ரஷ்யாவிலிருந்து எரிபொருள் வாங்குவதைக் கணிசமாகக் குறைத்தாலும், தனது தேவையைப் பூர்த்தி செய்ய வேறு நாடுகளிலிருந்தே கச்சா எண்ணெயைப் பெற வேண்டியிருக்கும். இது மத்திய கிழக்கு, ஆப்பிரிக்கா அல்லது பிற உற்பத்தியாளர்களிடமிருந்து விநியோகத்திற்கான போட்டியை அதிகரிக்கச் செய்யும். உலகளாவிய எண்ணெய் சந்தை மேலும் இறுக்கமடைந்தால், ரஷ்யாவின் வருவாயைக் குறைக்கும் நோக்கம் முழுமையாக நிறைவேறாமல் போவதோடு, சர்வதேச அளவில் எண்ணெய் விலையும் உயரக்கூடும். தனது நாட்டின் 140 கோடி மக்களுக்கும் மலிவான மற்றும் நம்பகமான எரிசக்தி கிடைப்பதை உறுதி செய்வதில் இந்தியாவுக்கு நியாயமான உரிமை உண்டு. இருப்பினும், எரிசக்தி பாதுகாப்பு என்ற கொள்கையானது வெறும் விநியோகத்தைப் பெறுவதோடு நின்றுவிடாமல், மலிவான எரிசக்தி ஏழை மற்றும் சாதாரண மக்களுக்கும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். இறக்குமதி செய்யப்படும் எண்ணெயை இந்தியா அதிகமாகச் சார்ந்திருப்பது ஒரு தற்காலிகப் பிரச்சினை அல்ல; அது நம் நாட்டின் அடிப்படைப் பலவீனங்களில் ஒன்றாகும். மலிவான கச்சா எண்ணெயை விற்க முன்வரும் மற்றொரு நாட்டைத் தேடுவது இதற்கு நீண்டகாலத் தீர்வாக இருக்க முடியாது. இது ஒரு சார்புநிலைக்குப் பதிலாக மற்றொரு சார்புநிலையை உருவாக்குவதற்கே வழிவகுக்கும். பொதுப் போக்குவரத்து மற்றும் ரயில்வே துறை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, எரிசக்தித் திறன், மின்சார வாகனப் போக்குவரத்து, பரவலாக்கப்பட்ட மின் உற்பத்தி மற்றும் உள்நாட்டு உற்பத்தித் துறை ஆகியவற்றில் தீவிர முதலீடுகளை மேற்கொள்வதன் மூலமே இறக்குமதி செய்யப்படும் புதைபடிவ எரிபொருட்களைச் சார்ந்திருப்பதை இந்தியப் பொருளாதாரம் குறைக்க முடியும். இந்த மாபெரும் எரிசக்தி மாற்றமானது சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு உதவுவதோடு மட்டுமல்லாமல், நமது தேசியப் பாதுகாப்பையும் பொருளாதாரச் சுதந்திரத்தையும் வலுப்படுத்தும்" என்று குறிப்பிட்டார். மேலும், இந்திய அரசு எந்தவொரு ஒற்றைப் புவிசார் அரசியல் பிரிவையோ அல்லது எரிசக்தி மூலத்தையோ அளவுக்கு அதிகமாகச் சார்ந்திராமல், உண்மையான மூலோபாய சுயாட்சியைப் (strategic autonomy) பின்பற்ற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். "இந்தியா தனது எரிசக்தி மற்றும் வர்த்தகக் கூட்டாண்மைகளைப் பல்வகைப்படுத்த வேண்டும். அதேவேளையில், இறக்குமதி செய்யப்படும் புதைபடிவ எரிபொருட்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்க உதவும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, பொதுப் போக்குவரத்து மற்றும் எரிசக்தித் திறன் மேம்பாடு ஆகியவற்றில் தனது முதலீடுகளை விரைவுபடுத்த வேண்டும். இந்தியா தன்னை ஒரு குறிப்பிட்ட புவிசார்

அரசியல் வலையத்திற்குள் முடக்கிக் கொண்டு தனது மூலோபாய சுயாட்சியைத் தளரச் செய்யக் கூடாது. நமது வெளியுறவு மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் அமைதியைப் பாதுகாப்பது, பொருளாதாரப் பாதுகாப்பை வழங்குவது மற்றும் சாதாரண குடிமக்களின் நலனுக்காக உழைப்பது ஆகியவற்றின் அடிப்படையில்தான் இருக்க வேண்டும். இந்த மோதல் பரந்த அளவிலான பொருளாதார மோதலாக மாறுவதைத் தவிர்க்க, இந்தியாவும் அமெரிக்காவும் தொடர்ச்சியான இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும். இந்திய அரசு தனது வர்த்தக மற்றும் பொருளாதார நலன்களைப் பாதுகாப்பதோடு, அதன் முடிவுகள் மக்களின் நலன் மற்றும் நாட்டின் நீண்டகால நலன்களால் மட்டுமே வழிநடத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்" என அவர் தெரிவித்துள்ளார்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி சார்பில் பத்திரிகையாளர் சந்திப்பு

புதுதில்லி: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி சார்பாக 24.09.2026 அன்று காலை 11.30 மணியளவில் மாநிலத் தலைமையகத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. இந்நிகழ்வில், மாநில அளவில் பொதுமக்களிடையே முக்கியத்துவம் பெற்றுள்ள நான்கு முக்கியப் பிரச்சினைகள் தேர்வு செய்யப்பட்டு, அவை தொடர்பான ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் நிலைப்பாடுகள் மற்றும் கவலைகள் குறித்து ஊடக நண்பர்களிடம் விரிவாக



எடுத்துரைக்கப்பட்டது. மாணவர்களின் நலனுக்காக தமிழக அரசால் விரிவுபடுத்தப்பட்டுள்ள காலை உணவுத் திட்டத்திற்கு வரவேற்பு, மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல், தொடர்ந்து நிலவும் மின்வெட்டு மற்றும் பொதுமக்களைப் பதற்றமடையச் செய்யும் வகையில் அதிகரித்து வரும் மின் கட்டணம், பால் தட்டுப்பாடு ஆகிய நான்கு முக்கியப் பிரச்சினைகள் குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் நிலைப்பாடுகள் விரிவாக விளக்கப்பட்டன. இந்நிகழ்வில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி மாநிலத் தலைவர் மௌலவி A. முஹம்மது ஹனீபா மன்பயீ அவர்கள் கலந்துகொண்டு, மேற்கண்ட நான்கு பிரச்சினைகள் தொடர்பான அமைப்பின் நிலைப்பாடுகளை விரிவாக எடுத்துரைத்தார். அவரது உரையைத் தொடர்ந்து, ஊடக நண்பர்கள் பல்வேறு கேள்விகளை முன்வைத்தனர். மதுராந்தகம் மற்றும் தாராபுரம் இடைத்தேர்தலில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் யாருக்கு ஆதரவு அளிக்கிறது, தொடரும் மின்வெட்டு தொடர்பாக ஏதேனும் போராட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதா, மின்வெட்டுக்கு முந்தைய ஆட்சிக் காலத்தில் அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளே காரணம் என்று அமைச்சர்கள் கூறுவது குறித்து அமைப்பின் கருத்து என்ன, UPA பரிவர்த்தனை தொடர்பான நிலைப்பாடு என்ன, தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் மீது குற்றச்சாட்டுகள் முன்வைத்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பதவி விலக வேண்டும் என்று கூறப்பட்டுள்ள நிலையில் அது குறித்து அமைப்பின் கருத்து என்ன, காலை உணவுத் திட்டத்தில் உணவு உட்கொண்ட மாணவர்கள் மயக்கமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் குறித்து கருத்து என்ன, கி. வீரமணி தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பாலியல் குற்றச்சாட்டுகள் குறித்து கருத்து என்ன, பல்கலைக்கழகம் தொடங்குவதற்காக முதலில் 100 ஏக்கர் நிலம் வழங்கப்படும் எனக் கூறப்பட்ட நிலையில் தற்போது 12 ஏக்கராகக் குறைக்கப்பட்டிருப்பது குறித்து கருத்து என்ன, சிறுபான்மை முஸ்லிம் மாணவர்கள் வெளிநாடுகளில் கல்வி பயில்வதற்கான வாய்ப்பில் தற்போது 10 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுவதாகக் கூறப்படும் நிலையில் அந்த எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளப்படுமா, வட்டியில்லாக் கடன் வழங்குவதற்காக தமிழக அரசு ரூ.100 கோடியை வக்ஃப் வாரியத்திடம் வழங்கியுள்ள திட்டத்தை எவ்வாறு பார்க்கிறீர்கள் உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை ஊடக நண்பர்கள் எழுப்பினர். மேற்கண்ட அனைத்து கேள்விகளுக்கும் மாநிலத் தலைவர் மௌலவி A. முஹம்மது ஹனீபா மன்பயீ அவர்கள் விரிவாகப் பதிலளித்தார். இந்நிகழ்வில் மாநிலத் துணைத் தலைவர்கள் T. யூசுப் பாஷா, K. M. சிராஜ் அஹ்மத், மாநில அமைப்புச் செயலாளர் K. ஜலாலுதீன், மாநில ஊடகச் செயலாளர் S. சாகுல் ஹமீது, மாநிலச் செயலாளர்கள் T. அஜீஸ் லுத்புல்லாஹ், V. S. முஹம்மது அமீன், S. N. சிக்கந்தர் மற்றும் பாத்திமா ஜலால் ஆகியோரும் கலந்துகொண்டனர். மேலும், 25-க்கும் மேற்பட்ட ஊடக நண்பர்கள், தொலைக்காட்சி நிருபர்கள், எழுத்தாளர்கள், யூடியூபர்கள் மற்றும் பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். பல்வேறு முக்கியமான பொதுப் பிரச்சினைகள் தொடர்பாக ஊடக நண்பர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டதையடுத்து, பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சி நிறைவுற்றது.